# நாணயக் கொள்கை அறிக்கை

2026 ஓகத்து

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

*நாணயக் கொள்கை அறிக்கையானது ஆண்டிற்கு இரு முறை வெளியிடப்படுகின்றது. இவ்வறிக்கையின் உள்ளடக்கம், 2026 யூலை 22 அன்று மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கை அறிவிப்புடன் முடிவுறுத்தப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் 2026 யூலையில் உள்ளவாறான நாணயக் கொள்கைச் சுற்றில் கிடைப்பனவாகவுள்ள தரவுகளை அடிப்படையாகக்கொண்டு அமைந்துள்ளது.*

© இலங்கை மத்திய வங்கி

ISBN 978-624-6764-40-1

2026 ஓகத்து 13

# உள்ளடக்கம்


**இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு....4**

**சுருக்க அறிக்கை....6**

**1. நாணயக் கொள்கைச் சுருக்கம்....8**

**2. பணவீக்கம் மற்றும் பொருளாதாரத் தோற்றப்பாடு....10**

**2.1. அடிப்படை எதிர்வுகூறல்....10**

பணவீக்கத்திற்கான வாய்ப்புக்கள்....10
பணவீக்க எதிர்பார்க்கைகள்....14
உண்மைப் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள்....15

**2.2. எதிர்வுகூறலுக்கு அடிப்படையாகவிருக்கும் முக்கிய எடுகோள்கள்....16**

உலகளாவிய சூழல்....16
இறைப் பாதை....18
வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு....19

**2.3. அடிப்படை எதிர்வுகூறல்களின் அடைவிற்கான இடர்நேர்வுகள்....19**

பணவீக்க எதிர்வுகூறல்களின் அடைவிற்கான இடர்நேர்வுகள்....19
பொருளாதார வளர்ச்சி எறிவுகளின் அடைவிற்கான இடர்நேர்வுகள்....20

**2.4. முன்னைய எதிர்வுகூறலுடனான ஒப்பீடு....20**

நடுத்தரகால எறிவுகளுக்குப் பயன்படுத்தப்படும் முக்கிய எடுகோள்கள்....21
பணவீக்கப் பாதை....21

**3. தற்போதைய பொருளாதார அபிவிருத்திகள்....22**

**3.1. பணவீக்கம்....22**

**3.2. உண்மைத் துறை....27**

**3.3. நாணயத் துறை....29**

வட்டி வீதங்கள்....29
உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மை....32
உள்நாட்டுக் கொடுகடன் நிலைமைகள் மற்றும் நாணய நிரம்பல்....33

**3.4. வெளிநாட்டுத் துறை....37**

சென்மதி நிலுவை....37
செலாவணி வீதம்....40
ஒதுக்குச் சொத்துக்கள்....41

**3.5. இறைத் துறை....41**

**3.6. நிதியியல் துறை....43**

**3.7. உலகளாவிய அபிவிருத்திகள்....45**

# இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைவதும் பேணுவதும் இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோளாகக் காணப்படுகின்றது. தாழ்ந்த மற்றும் நிலையான பணவீக்கத்தை பேணுவதன் மூலம் மத்திய வங்கியானது நீண்ட காலத்தில் உறுதியான பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்குப் பங்களித்து, இதனூடாக பொதுமக்களின் நல்வாழ்வுக்கு ஆதரவளிக்கின்றது.

மத்திய வங்கியானது உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைவதற்கும் பேணுவதற்கும் நாணயக் கொள்கையினை மேற்கொள்கின்றது. நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் ஒத்திசைந்து செல்லும் விதத்தில் நாணயக் கொள்கையினை உருவாக்குவதற்கும் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீத முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கும் நாணயக் கொள்கைச் சபை[1] பொறுப்பாகவுள்ளது. இக்கட்டமைப்பானது நிதி அமைச்சருக்கும் மத்திய வங்கிக்கும் இடையிலான நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குடன் இசைந்து செல்லும் விதத்தில் பணவீக்கத்தினைப் பேணுவதனை இலக்காகக் கொண்டுள்ளது. இவ்வுடன்படிக்கை நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கை என அறியப்படுகின்றது. 2023 ஒத்தோபரில் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தற்போதைய உடன்படிக்கையானது காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தினை 5 சதவீதத்தில் பேணுவதற்கு மத்திய வங்கியினைத் தேவைப்படுத்துகின்றது[2]. இலக்கிலிருந்தான சாத்தியமான விலகல்களை அளவிடுதல் மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற நோக்கங்களுக்காக நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையின் கீழ் ±2 சதவீத புள்ளிகளைக் கொண்ட இடைவெளியொன்று (அதாவது 3.0 சதவீதம் - 7.0 சதவீதம்) அனுமதிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகளுக்கு இந்த எல்லைகள் மீறப்பட்டால் நிதி அமைச்சர் ஊடாகப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றினை சமர்ப்பிக்க வேண்டுமென நாணயக் கொள்கைச் சபையினைத் தேவைப்படுத்துவதுடன், இது பொதுமக்களுக்கு கிடைப்பனவாகவும் காணப்படல் வேண்டும்.

பணவீக்க இலக்கினை அடையும் பொருட்டு, குறுங்காலச் சந்தை வட்டி வீதங்களை விரும்பத்தக்க பாதையில் வழிநடத்துவதற்கு மத்திய வங்கி அதன் கொள்கைச் சாதனங்களைப் பயன்படுத்துகின்றது. தற்போதைய நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் கீழ், மத்திய வங்கியின் தொழிற்பாட்டு இலக்காக சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் செயற்படுகின்றமையுடன், ஓரிரவுக் கொள்கை வீதமானது அதன் நாணய நிலையினை சமிக்ஞைப்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமான முதன்மை நாணயக் கொள்கைச் சாதனமாக செயற்படுகின்றது. அதற்கமைய, ஓரிரவுக் கொள்கை வீதம் அறிவிக்கப்பட்டவுடன் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தினை ஓரிரவுக் கொள்கை வீதத்தில் அல்லது அண்மித்துப் பேணுவதற்கு மத்திய வங்கி அதன் நாணயத் தொழிற்பாடுகளை மேற்கொண்டு அளவமைக்கின்றது. அவ்வாறு செய்கையில், நிலவுகின்ற மற்றும் எதிர்பார்க்கப்படும் உள்நாட்டு திரவத்தன்மை நிலைமைகள் மீதும் உரிய கவனம் செலுத்தப்படுகின்றது. அதனைத்தொடர்ந்து, நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்தில், ஓரிரவுச் சந்தை வட்டி வீதங்கள் நிதியியல் சந்தைகளினூடாக பரந்தளவிலான பொருளாதாரத்திற்கு ஊடுகடத்தப்பட்டு, இறுதியாக பணவீக்கத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

---

[1] இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையானது ஆளுநர், ஆளும் சபை உறுப்பினர்கள், விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பவற்றிற்குப் பொறுப்பான துணை ஆளுநர்கள் மற்றும் பொருளியல் அல்லது நிதியியலில் நிபுணர்களாக இருக்கும் இரண்டு வேறு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

[2] பணவீக்க இலக்கானது 2352/20ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் மக்களிற்குத் தொடர்பூட்டப்பட்டது. காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது தொடர்புடைய காலாண்டின் மூன்று மாத காலப்பகுதியில் மாதாந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட ஆண்டிற்காண்டு சதவீத மாற்றங்களின் எளிய சராசரியினைக் குறிக்கின்றது.

நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் முன்னோக்கிய பார்வையிலமைந்தவையாகவும் தரவினால் உந்தப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. நாணயக் கொள்கை நடவடிக்கைகள் காலதாமதமொன்றுடன் பணவீக்கத்தில் தாக்கம் செலுத்துகின்றதென்பதனால் முன்னோக்கிய பார்வையிலமைந்ததோர் அணுகுமுறை இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. பொருத்தமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைத் தீர்மானிப்பதற்கு ஆண்டொன்றிற்கு ஆறு தடவைகள் மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபை கூடுகின்றது. அதன் தீர்மானங்களை மேற்கொள்வதில், நாணயக் கொள்கைச் சபையானது தற்போதைய பணவீக்க இயக்கவாற்றல்கள் மற்றும் அதன் தோற்றப்பாடு, பொருளாதாரத்தின் நிலை மற்றும் எதிர்கால வாய்ப்புக்கள் மற்றும் அத்தகைய எறிவுகளுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் மற்றும் நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றை மதிப்பீடுசெய்கின்றது. மதிப்பீடானது எறிவுசெய்யப்பட்ட முக்கிய உலகளாவிய போக்குகள் மற்றும் நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றையும் பரிசீலனையில் கொள்கின்றன. இக்கூட்டங்களில் ஆராயப்படும் எறிவுகளானவை கிடைக்கப்பெற்ற தரவுகள், முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகள் பற்றிய அண்மைக்கால எதிர்வுகூறல்கள், உலகளாவிய குறிகாட்டிகளின் எறிவுகள் அதேபோன்று நிபுணத்துவ அலுவலர் தீர்மானங்கள் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டுள்ளன. ஆளுநரின் தலைமையிலான உள்ளகக் குழுவொன்றாகக் காணப்படுகின்ற நாணயக் கொள்கைக் குழுவானது விரிவான தொழில்நுட்ப மற்றும் கொள்கை ரீதியான உன்னிப்பான பரிசீலனைகளுக்குப் பின்னர் நாணயக் கொள்கைச் சபையின் மீளாய்விற்கான கொள்கைப் பரிந்துரைகளை வழங்குகின்றது.

நெகிழ்ச்சியத்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் முக்கிய கூறொன்றான நாணயக் கொள்கை அறிக்கை, மத்திய வங்கிச் சட்டத்தின் 27 மற்றும் 80ஆம் பிரிவுகளின் பிரகாரம் தயாரிக்கப்படுகின்றது. இப்பிரிவுகள் பணவீக்கத்தின் அண்மைய போக்குகள், பணவீக்கத்தின் அடிப்படை மூலங்கள், நடுத்தரகால பணவீக்க எறிவுகள் மற்றும் அவ்வெறிவுகளிற்கான முக்கிய இடர்நேர்வுகள் மற்றும் அதன் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் மற்றும் நோக்கங்களின் அடைவு என்பவற்றினைத் தெளிவுபடுத்துகின்ற அறிக்கையொன்றினை ஆண்டிற்கு இருமுறை வெளியிடுவதற்கு மத்திய வங்கிக்கு ஆணையளிக்கின்றன. இவ்வறிக்கையானது, கொள்கை வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றுக்கான மத்திய வங்கியின் கடமைப்பொறுப்பிற்கு சான்றுபகர்கின்றது. இதற்கு மேலதிகமாக, உள்நாட்டுப் பொருளாதாரம் மற்றும் உலகளாவிய பொருளாதாரம் என்பவற்றின் நடப்புப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய பொதுமக்கள் விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும் அது பணியாற்றுகின்ற அதேவேளை, பொருளாதார வளர்ச்சித் தோற்றப்பாடு பற்றிய மதிப்பீட்டையும் அதனுடன் தொடர்புடைய இடர்நேர்வையும் வழங்குகின்றது.

**வரைபடம் 01: இலங்கையில் நாணயக் கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளுகின்ற செயன்முறை**
*(ஆண்டொன்றிற்கு ஆறு தடவைகள்)*



## சுருக்க அறிக்கை

2026 பெப்புருவரியின் பிற்பகுதியிலிருந்து உள்நாட்டு பொருளாதாரத்திற்கான கசிவுத்தாக்கங்களுடன்கூடிய மத்திய கிழக்கில் தீவிரமடைந்த புவிசார் அரசியல் பதற்றங்களினால் அடையாளப்படுத்தப்பட்ட சவால்மிக்க வெளிநாட்டு சூழலொன்றுக்கு மத்தியில் இலங்கையின் பேரண்டப் பொருளாதார நிலைமைகள், 2026இன் இதுவரையிலும் பரந்தளவில் தாக்குப்பிடிக்கத்தக்கதாகவிருந்தது.

2026 முதற்காலாண்டில் ஏறத்தாழ 2 சதவீதம் சராசரியாகவிருந்த முதன்மைப் பணவீக்கமானது முதன்மையாக உயர்வான உலகளாவிய வலு விலைகள் உள்நாட்டு எரிபொருள் மற்றும் சக்தி விலைகளுக்கு உடனடியாக ஊடுகடத்தப்படுதல் அத்துடன் ஏனைய துறைகளுக்கான அவற்றின் இணைந்த கசிவுத் தாக்கங்கள் காரணமாக அப்போது தொடங்கி சடுதியாக உயர்வடைந்து இலக்கிற்கு மேலான மட்டங்களை அடைந்தது. பணவீக்கத்தின் அண்மைய அதிகரிப்பு பெருமளவில் வழங்கலினால் தூண்டப்பட்டு வருகின்ற அதேவேளை, கொடுகடனின் குறிப்பிடத்தக்க விரிவாக்கம் மற்றும் கொடுகடனினால் தூண்டப்படும் இறக்குமதிகள் என்பவற்றினால் பிரதிபலிக்கப்பட்டவாறு வலுவடைகின்ற உள்நாட்டு கேள்வி நிலைமைகளும் ஏதுவாகின்ற பணவீக்க அழுத்தங்களுக்கு பங்களித்துள்ளன. அதற்கமைய, முதன்மைப் பணவீக்கமானது அண்மைய வழங்கல் பக்க அதிர்வுகளின் தாக்கங்கள் மறைந்து, நாணயக் கொள்கை இறுக்கமாக்கலின் தாக்கம் பரந்த பொருளாதாரத்திற்கு ஊட்டப்படுவதற்கேற்ப நடுத்தரகாலத்தில் மிதமடைந்து, இலக்கை நோக்கி ஒருங்கிச்செல்வதற்கு முன்னர், உயர்வடைந்தும் இலக்கிற்கு மேலும் காணப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. மையப் பணவீக்கம் அதிகரித்து, நடுத்தரகாலத்தில் முதன்மைப் பணவீக்க இலக்கினை அண்மித்துக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, பணவீக்க தோற்றப்பாட்டிற்கான எஞ்சிய இடர்நேர்வுகள் அண்மைய மற்றும் நடுத்தரகாலம் இரண்டிலும் மேல்நோக்கிச் சாய்ந்து காணப்பட்டு, உலகளாவிய பண்ட சந்தைகளில் உயர்வடைந்த நிச்சயமின்மையையும் எல் நினோவுடன் இணையப்பெற்ற பாதகமான வானிலை நிலைமைகளின் அதிகரிக்கின்ற இடர்நேர்வையையும் பிரதிபலிக்கின்றது. எவ்வாறிருப்பினும், பணவீக்க எதிர்பார்க்கைகள் நடுத்தரகாலத்தில் பரந்தளவில் இலக்கினைச் சூழ்ந்து நிலையுறுதியடைந்து காணப்படுகின்றது.

உயர்வடைந்த பணவீக்கத் தோற்றப்பாட்டிற்கு மத்தியில், பணவீக்கத்தை கட்டுப்படுத்தி பணவீக்க எதிர்பார்க்கைகளின் நிலையுறுதி தளர்வதைத் தணிக்கும் முயற்சியொன்றாக மத்திய வங்கி 2023 நடுப்பகுதியிலிருந்து செயற்பாட்டிலிருந்த அதன் தளர்வான நாணயக் கொள்கை நிலையை முடிவுறுத்தி, 2026 மேயில் நாணயக் கொள்கை நிலையைத் தீர்க்கமாக இறுக்கமாக்கியது. அதற்கமைய, கொள்கை வீத இறுக்கமாக்கலுக்கிசைவாக சந்தை வட்டி வீதக் கட்டமைப்பு மேல்நோக்கி சீராக்கப்பட்டுள்ளது. நிலைபெற்றுள்ள பொருளாதார நடவடிக்கை மற்றும் இறக்குமதிக்கான கேள்வி என்பவற்றைப் பிரதிபலித்து, தொடர்ந்தும் வலுவானதாக விளங்கிய தனியார் துறைக்கான கொடுகடன், இறுக்கமான நிதியியல் நிலைமைகள் அத்துடன் மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் மூலம் எடுக்கப்பட்ட ஏனைய கொள்கை வழிமுறைகள் என்பன மூலம் தூண்டப்பட்டு வரவிருக்கும் காலத்தில் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய கிழக்கில் தீவிரமடைந்த பதற்றங்கள் அத்துடன் உயர்வான மோட்டார் வாகன இறக்குமதிகள் என்பன மூலம் வெளிநாட்டுத் துறையின் தாக்குப்பிடிக்குந்தன்மை பரீட்சிக்கப்பட்டு, தொடர்ச்சியாக மிகைகளைக் கொண்ட மூன்று ஆண்டுகளின் பின்னர் 2026இன் முதலாமரைப்பகுதியில் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கில் பற்றாக்குறையினை விளைவித்தது. தொழிலாளர் பணவனுப்பல்கள் வலுவாகக் காணப்பட்ட போதிலும் உயர்வான இறக்குமதிச் செலவினம் சுற்றுலா வருவாய்களில் மிதமடைதலுடன் ஒன்றிணைந்து நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைக்கு பாரியளவில் பங்களித்தது. 2026இன் ஆரம்பப்பகுதியில் பரந்தளவில் நிலையாகக் காணப்பட்ட இலங்கை ரூபாய் மத்திய கிழக்கில் பதற்றங்கள்

அதிகரித்தமை மூலம் பெறுமதித் தேய்வு அழுத்தங்களை, முக்கியமாக 2026 மார்ச்சு முதல் யூன் வரையிலான காலப்பகுதியில் எதிர்கொண்டது.[3] ஒதுக்குத் தாங்கியிருப்புக்களைக் கட்டியெழுப்பி பேணிக் காப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்த போதிலும் சவால்மிக்க உலகளாவிய நிலைமைகளும் தொடர்ச்சியான வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மிதமடைதலை விளைவித்தது. பல்புடை நிறுவனங்களிடமிருந்து கிடைத்த உட்பாய்ச்சல்கள் இம்மிதமடைதலுக்கு பகுதியளவில் காப்பளித்தது.

நிலையுறுதிமிக்க அரசிறை அடிப்படையிலமைந்த இறைத் திரட்சிப்படுத்தல் வழிமுறைகளால் துணையளிக்கப்பட்டு 2026இன் முதல் ஐந்து மாதகாலப்பகுதியில் இறைத் துறைச் செயலாற்றம் தொடர்ந்தும் வலுவடைந்தது.

பொருளாதாரமானது 2024 இலும் 2025 இலும் தொடர்ச்சியாக 5.0 சதவீதம் கொண்ட இரு ஆண்டுகள் வளர்ச்சியின் பின்னர் வலுவடைந்த பேரண்டப் பொருளாதார அடிப்படைகள், மேம்பட்ட பொருளாதார தாக்குப்பிடிக்கும்தன்மை மற்றும் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் சாதகமான நிதியியல் நிலைமைகள் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு, 2026இன் முதலாம் காலாண்டில் 5.1 சதவீதம் கொண்ட வலுவான உண்மை உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இவ்வளர்ச்சி உத்வேகத்தின் தொடர்ச்சியை முன்னோக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகளும் காண்பித்தன. எவ்வாறிருப்பினும், புதிதாகத் தோற்றம்பெறும் பண்ட விலை அதிர்வுகள், வர்த்தக இடையூறுகள் மற்றும் உலகளாவிய கேள்வியில் மெதுவடைதல் என்பன உள்ளடங்கலாக புவிசார் அரசியல் பதற்றங்கள் மீளத்தொடங்கும் சாத்தியப்பாடு என்பதுடன் உலகளாவிய பொருளாதாரம் மீதான தாக்கங்கள் என்பன எதிர்வரும் காலப்பகுதியில் உள்நாட்டு பொருளாதார செயலாற்றத்தில் தொடர்ந்தும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

[3] 2026 ஓகத்து 12 அன்றுள்ளவாறு இலங்கை ரூபா ஐ.அ.டொலரிற்கெதிராக 7.4 சதவீதத்தினால் பெறுமதித் தேய்வடைந்தது.

## 1. நாணயக் கொள்கைச் சுருக்கம்

2026 மார்ச்சில் நடைபெற்ற இந்த ஆண்டிற்கான இரண்டாவது நாணயக் கொள்கை மீளாய்வில், மத்திய கிழக்கில் தொடர்ந்து நிலவும் போர் சூழ்ந்த நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியில், ஓரிரவுக் கொள்கை விகிதத்தை தற்போதைய மட்டத்திலேயே பேணுவதற்கு மத்திய வங்கி தீர்மானித்தது. 5% பணவீக்க இலக்குடன் ஒப்பிடுகையில் பணவீக்கம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை, இந்த நாணயக் கொள்கை நிலையை மாற்றமின்றி பேணுவதனை ஆதரவளித்தது. இது, உயர்ந்த எரிபொருள் விலைகளின் தாக்கம் மற்றும் இவையின் பணவீக்கத்திற்கான ஊடுகடத்தலை எதிர்கொள்வதற்கான கொள்கை ரீதியான இடைவெளியினை வழங்கியது.

மத்திய வங்கி 2026 மேயில் அதன் நாணயக் கொள்கை நிலையை இறுக்கமாக்கி, 2023 யூன் தொடக்கம் செயற்பாட்டிலிருந்துவந்த தளர்வான நாணயக் கொள்கை கட்டத்தின் முடிவுறுத்தலை அடையாளப்படுத்தியது. 2026 பெப்புருவரி பிந்திய பகுதியிலிருந்து மத்திய கிழக்கில் யுத்தம் தீவிரமடைந்ததால் தோன்றிய பாதகமான கசிவுத்தாக்கங்கள், தனியார் துறைக்கான கொடுகடன், கொடுகடனினால் உந்தப்பட்ட இறக்குமதிகள் என்பவற்றின் ன் தொடர்ச்சியான விரிவடைதலினால் பிரதிபலிக்கப்பட்ட உள்நாட்டு கேள்வியின் படிப்படியான வலுவடைதல் மற்றும் முன்னணிப் பொருளாதாரக் குறிகாட்டிகளால் பிரதிபலிக்கப்பட்டவாறு மேம்பட்ட உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கை என்பன காரணமாக உயர்வடைந்த பணவீக்கத் தோற்றப்பாட்டிற்கு பதிலிறுத்தும் வகையில் ஓரிரவுக் கொள்கை வீதம் 2026 மேயில் 1 சதவீதப் புள்ளியினால் 8.75 சதவீதமாக உயர்த்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக, வெளிநாட்டுத் துறையில் தீவிரமடைந்த அழுத்தங்கள், வலு விலைகளின் சீராக்கத்திலிருந்து பணவீக்கம் மீதான இரண்டாம் சுற்றுத் தாக்கங்கள் மற்றும் பணவீக்க எதிர்பார்க்கைகளின் நிலையுறுதித்தன்மையின் தளர்வு சார்ந்த இடர்நேர்வு என்பனவும் இறுக்கமான மற்றும் எச்சரிக்கைமிகு நாணயக் கொள்கை நிலையினைப் பின்பற்றுவதற்கு வழிவகுத்தது.

முன்னோக்கிச் செல்கையில் கொடுகடன் வளர்ச்சியையும் கேள்வி அழுத்தங்களையும் மிதமடையச்செய்யும் நோக்குடன் 2026 யூலை நாணயக் கொள்கைச் சுற்றுக் காலப்பகுதியில் மத்திய வங்கி கொள்கை வீதத்தை மாற்றமின்றி பேணியது. இது 2026 மேயில் நடைமுறைப்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை இறுக்கமாக்கலின் ஊடுகடத்தல் செயல்படுவதற்கு போதியளவு காலத்தை இயலச்செய்தது. பணவீக்கத்தில் அண்மைய உயர்வடைதலுக்கு மத்தியில் பணவீக்க எதிர்பார்க்கைகள் இலக்கினை பரந்தளவில் சூழ்ந்து நிலைநிறுத்தப்பட்டுக் காணப்பட்ட அதேவேளை வெளிநாட்டுத் துறை அழுத்தங்கள் ஓரளவு தளர்வடைந்தமை கொள்கை வீதத்தை அதன் தற்போதைய மட்டத்தில் பேணுவதற்கு இடமளித்தது. எனினும், துரிதமாக மாறிவருகின்ற உலகளாவிய புவிசார் அரசியல் நிலைமைகள் மற்றும் அதன் விளைவான உலகளாவிய பொருளாதார நிச்சயமின்மை என்பன உள்நாட்டு பணவீக்கத் தோற்றப்பாட்டிற்கு தொடர்ந்தும் இடர்நேர்வுகளைத் தோற்றுவித்து, இதனூடாக நாணயக் கொள்கையை நடாத்துவதில் தொடர்ச்சியான எச்சரிக்கையை அவசியப்படுத்துகிறது.

நாணயக் கொள்கைச் சபை ஆண்டின் ஐந்தாவது நாணயக் கொள்கை மீளாய்விற்காக 2026 செத்தெம்பரில் கூடும்.

## இறுதி நாணயக் கொள்கை அறிக்கையிலிருந்தான நாணயக் கொள்கைத் தீர்மானங்கள்

(2026 பெப்புருவரி – 2026 யூலை)

**2026 இல.02**

2026 மாச்சு

ஓரிரவு கொள்கை வீதம் 7.75% ஆகப் பேணப்பட்டது

**2026 இல.03**

2026 மே

ஓரிரவு கொள்கை வீதம் 1 சதவீதப் புள்ளிகளால் 8.75% ஆக அதிகரிக்கப்பட்டது

**2026 இல.04**

2026 யூலை

ஓரிரவு கொள்கை வீதம் 8.75% ஆகப் பேணப்பட்டது

## 2. பணவீக்கம் மற்றும் பொருளாதாரத் தோற்றப்பாடு

பணவீக்கம் மற்றும் உண்மைப் பொருளாதார வளர்ச்சி பற்றிய எறிவுகளை மையமாகக்கொண்டு 2026 யூலை காலப்பகுதியில் நாணயக் கொள்கைத் தீர்மானத்திற்கு ஆதரவாக மத்திய வங்கி அலுவலர்களால் ஆக்கப்பட்ட நடுத்தரகால பேரண்டப் பொருளாதார எறிவுகள் இப்பிரிவில் தொகுக்கப்பட்டுள்ளன.[4] இவ்வெறிவுகள், கிடைப்பனவாகவிருந்த தரவுகள், முக்கிய மாறிகளின் அண்மைக்கால எதிர்வுகூறல்கள், உலகளாவிய பேரண்டப்பொருளாதார எறிவுகள், 2026 யூலை மாத நாணயக் கொள்கைச் சுற்றில் ஆக்கப்பட்ட ஊகங்கள் மற்றும் அலுவலர் தீர்மானங்கள் என்பவற்றைப் பிரதிபலிக்கின்றன. இவ்வெறிவுகள் இவ்வறிக்கையின் *அடிப்படை எதிர்வுகூறலாகக்* கருதப்படுகின்றன.

மத்திய கிழக்கில் நிலவுகின்ற நிலையற்ற நிலைமை, மற்றும் உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கை இரண்டிலும் அதன் பரந்த வீச்சிலான கசிவுத்தாக்கங்கள் என்பவற்றுக்கு மத்தியில் தற்போதைய பேரண்டப் பொருளாதார எறிவுகள் உயர்ந்தளவிலான நிச்சயமற்றதன்மைக்குட்பட்டதாகக் காணப்படுகின்றன. அதற்கமைய, அடிப்படையாகின்ற நிலைமைகளில் எவையேனும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இவ்வெறிவுகளிலிருந்து குறிப்பிடத்தக்க விலகல்களுக்கு வழிவகுக்கக்கூடும்.

### 2.1. அடிப்படை எதிர்வுகூறல்

முதன்மைப் பணவீக்கமானது பொருத்தமான கொள்கை வழிமுறைகள் மூலம் துணையளிக்கப்பட்டு நடுத்தரகாலத்தில் இலக்கினை நோக்கி நிலையுறுதிபெறுவதற்கு முன்னர் அண்மைக் காலத்தில் 5 சதவீதம் கொண்ட இலக்கிற்கு மேல் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்பார்க்கப்படும் இப்பணவீக்க பாதை மத்திய கிழக்கில் நிலவும் பதற்றங்களின் தாக்கங்களும் அவற்றின் கசிவுளும் தற்காலிகமானவை மற்றும் படிப்படியாக குறைந்துசெல்லும் எனும் ஊகத்தின் நிபந்தனைக்குட்பட்டதாகும். அதேவேளை, அண்மைக்கால வளர்ச்சி வாய்ப்புக்களின் மேம்படுதலுடன் மத்திய கிழக்கில் நிலவும் புவிசார் அரசியல் பதற்றங்களிலிருந்து தோன்றுகின்ற கசிவுத்தாக்கங்கள் முன்னர் எதிர்பார்க்கப்பட்டதைவிட தீவிரம் குறைவாக இருப்பதால் பொருளாதார வளர்ச்சிக்கான தோற்றப்பாடு ஒப்பீட்டளவில் நிலையானதாகக் காணப்படுகின்றது. அதற்கமைய, முன்னைய ஆண்டுகளில் பதிவாகிய வளர்ச்சி உத்வேகத்தினை தொடந்து, 2026 இற்கான பொருளாதார வளர்ச்சி 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதம் கொண்ட வீச்சிலிருக்குமென தற்போது எறிவுசெய்யப்பட்டுள்ளது. உள்நாட்டு கேள்வியின் முன்னேற்றம் மற்றும் தொடர்ச்சியான பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு என்பன நடுத்தரகாலத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும், தோற்றப்பாடானது புவிசார் அரசியல் அபிவிருத்திகள் மற்றும் படிப்படியாக மாறிவரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிலைமைகள் மற்றும் காலநிலை சார்ந்த இடர்நேர்வுகளுடன் தொடர்புடைய தீவிரமான நிச்சயமற்றதன்மைக்கு உட்பட்டே காணப்படுகின்றது.

#### பணவீக்கத்திற்கான வாய்ப்புக்கள்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100) அடிப்படையிலமைந்த காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது 2026இன் இரண்டாம் காலாண்டில் சராசரியாக 5.9 சதவீதமாக விளங்கி, நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட இடைவெளியை

[4] மத்திய வங்கியானது நடுத்தர கால பேரண்டப் பொருளாதார எறிவுகளைப் பெறுவதற்கு பகுதியளவிலான கட்டமைப்புசார் பேரண்டப்பொருளாதார மாதிரியான காலாண்டு எறிவு மாதிரியைப் பயன்படுத்துகின்றது. உலகளாவிய பேரண்டப் பொருளாதார எதிர்வுகூறல்கள் மற்றும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் மாதாந்த பணவீக்கத் தரவுகள் மற்றும் காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தித் தரவுகள் உள்ளிட்ட அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பான தரவுகளைப் பயன்படுத்தி, ஒவ்வொரு நாணயக் கொள்கை சுற்றின் போதும் இவை இற்றைப்படுத்தப்படுகின்றன. மாதிரி உட்கட்டமைப்பில் தொடர்ச்சியான மேம்பாடுகளை மேற்கொள்ளும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, ஒட்டுமொத்த பொருளாதாரச் சூழலில் ஏற்பட்டுள்ள அண்மைய அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கும் வகையில், காலாண்டு எறிவு மாதிரி, ஆண்டின் ஆரம்பத்தில் மீளாய்வு செய்யப்பட்டது.

விட பணவீக்க இலக்கிற்கு கீழாக எட்டுக் காலாண்டுகளாக தொடர்ச்சியாக விளங்கிய கொண்ட நீடித்த காலப்பகுதியினை முடிவுக்குக் கொண்டுவந்தது.[5]

**வரைபடம் 02: அடிப்படை காலாண்டு முதன்மைப் பணவீக்க எதிர்வுகூறல் (கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு)**

2026 யூலை நாணயக் கொள்கைச் சுற்றின் எறிவுகளை அடிப்படையாகக் கொண்டது




** மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சருக்கு இடையில் 2023 ஒத்தோபரில் கைச்சாத்திடப்பட்ட நாணயக் கொள்கை கட்டமைப்புசார் உடன்படிக்கையின் கீழ் பணவீக்க இலக்கு (5%) உடன்பட்டது.*

*குறிப்பு: வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகாலரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன.*

மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

**குறிப்பு: எதிர்வுகூறலொன்று என்பது வாக்குறுதியொன்றோ அன்றில் கட்டப்பாடொன்றோ அல்ல**

2026 யூலையில் நாணயக் கொள்கைச் சுற்றில் கிடைப்பனவாக இருந்த தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை எறிவுகள் பிரதிபலிக்கின்றன. அவை உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகளின் எதிர்வுகூறல்கள், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் படிப்படியான வளர்ச்சி மீட்சி, அரசாங்கத்தின் எதிர்பார்க்கப்படும் உள்நாட்டு இறைப் பாதை மற்றும் ஐக்கிய அமெரிக்க பெடரல் நிதியங்கள் வீதத்தினால் குறித்துரைக்கப்பட்ட உலகளாவிய நிதியியல் நிலைமைகள் ஆகிய நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணப்படுகின்றன. மேலும், எறிவுகள் மாதிரியுருவிற்கு ஒத்திசைவான வட்டி வீதப் பாதை மற்றும் அதன்மூலம் தோற்றம்பெறுகின்ற செலாவணி வீதங்கள் உள்ளடங்கலாக பேரண்டப்பொருளாதார பதிலிறுப்புக்கள் என்பன மீதான நிபந்தனைகளுக்குட்பட்டவையாகக் காணப்படுகின்றன. மேலும், அடிப்படை எறிவுகளில் முக்கிய பேரண்டப்பொருளாதாரக் கொள்கை நகர்வுகளெதுவும் எதிர்பார்க்கப்படுவதில்லை. ஆதலால், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் தொடர்ச்சி மற்றும் இறைத் திரட்சி மீதான முயற்சிகள் என்பன உள்ளார்ந்தமாகக் குறித்துக்காட்டப்படுகின்றன. அடிப்படை ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றில் ஏற்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம், எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து அடையப்பட்ட பணவீக்கப் பாதை விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும். வீச்சு வரைபடங்களுடன் இணைந்து, நடுத்தர கால பேரண்டப்பொருளாதார எறிவுகள் ஒவ்வொரு நாணயக் கொள்கைச் சுற்றிலும் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படும். தளம்பலான உலகளாவிய சூழல் மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்திலுள்ள நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றினைக் கருத்திற்கொண்டு, அடிப்படை எதிர்வுகூறல்கள் பல்வேறு சாத்தியமான மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகளிற்கு உள்ளாகின்றன. அடிப்படை எதிர்வுகூறலிற்கான இடர்நேர்வுகள் குறித்த விவரங்கள் "அடிப்படை எறிவுகளின் அடைவிற்கான இடர்நேர்வுகள்" பிரிவில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

[5] 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 26(5)ஆம் பிரிவானது மத்திய வங்கி பணவீக்க இலக்கினை உடன்பட்ட இடைவெளியொன்றினுள் தொடர்ச்சியான இரண்டு காலாண்டுகளில் பூர்த்திசெய்யத் தவறினால் பணவீக்க இலக்கினை எய்தத் தவறியமைக்கான காரணங்கள், மத்திய வங்கியினால் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பரிகார நடவடிக்கைகள் மற்றும் பணவீக்க இலக்கு எக்காலவரையறையினுள் எய்தப்படக்கூடுமோ அக்காலவரையறையின் ஒரு மதிப்பீடு என்பவற்றினைக் குறித்துக்காட்டி நாணயக் கொள்கைச் சபையானது பாராளுமன்றத்திற்குப் பொது அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்க வேண்டுமெனக் குறித்துரைக்கின்றது. 2023 ஒத்தோபரில் கையெழுத்திடப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையின் பிரகாரம், பணவீக்க இலக்கு மற்றும் வீச்சு என்பன முறையே 5 சதவீதமாகவும் ±2 சதவீதப் புள்ளிகளாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

உயர்வடைந்த வலு மற்றும் போக்குவரத்துப் பணவீக்கம், இறக்குமதி செய்யப்பட்டவற்றின் விலைகளுக்கான செலாவணி வீத ஊடுகடத்தல் மற்றும் அதன் தளத் தாக்கத்துடன் இணைந்து உயர்ந்தளவிலான தளம்பல்மிக்க உணவுப் பணவீக்கம் ஆகியவற்றினால் முக்கியமாக உந்தப்பட்டு, முதன்மைக் பணவீக்கமானது அண்மைக் காலத்தில், இலக்கிற்கு மேலாகத் தொடர்ந்து காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்பின்னர், மத்திய கிழக்கில் நிலவுகின்ற பதற்றங்களின் தாக்கங்களும் அவற்றின் கசிவுத்தாக்கங்களும் தற்காலிகமானவையென்றும் மற்றும் அவை படிப்படியாக மறைவடையுமெனவும் மேற்கொள்ளப்பட்ட எடுகோள்களின் நிபந்தனைக்குட்பட்டு, முதன்மைக் பணவீக்கமானது இலக்கு மட்டத்திற்கு மிதமடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. பொருத்தமான கொள்கை வழிமுறைகளினால் ஆதரவளிக்கப்பட்டு, முதன்மைப் பணவீக்கமானது நடுத்தர காலத்தில் இலக்கினை அண்மித்து உறுதிநிலையடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

முதன்மைப் பணவீக்கத்தின் பாதைக்கு ஒத்திசைவாக, பொருளாதாரத்தில் அடிப்படைக் கேள்வி நிலைமைகளைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கமும் படிப்படியான அதிகரிப்பை வெளிப்படுத்தி, நடுத்தர காலத்தில் முதன்மைப் பணவீக்க இலக்கினை அண்மித்துக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மையப் பணவீக்கம் அண்மைக் காலத்தில் உலகளாவிய உணவு விலைகள் மற்றும் உலகளாவிய பணவீக்கப் போக்குகளின் கசிவுத்தாக்கங்கள் உள்ளடங்கலாக இறக்குமதி செய்யப்பட்ட பணவீக்கம் மற்றும் வலு மற்றும் போக்குவரத்துப் பணவீக்கத்தின் ஊடுகடத்தல் தாக்கங்கள் என்பவற்றினால் முக்கியமாகத் தூண்டப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**வரைபடம் 03: அடிப்படை காலாண்டு மையப் பணவீக்க எதிர்வுகூறல் (கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு)**

**2026 யூலை நாணயக் கொள்கைச் சுற்றின் போதான எறிவுகளை அடிப்படையாகக் கொண்டது**




*குறிப்பு: வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன.*

மேலே வரைபடம் 02 இலுள்ள விளக்கக்குறிப்பினைப் பார்க்க.

மூலம்: இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் எறிவுகள்

வலு மற்றும் போக்குவரத்துப் பணவீக்கம், 2026 யூலையில் எரிபொருள் மற்றும் திரவப் பெற்றோலிய எரிவாயு விலைகளுக்கான கீழ்நோக்கிய சீராக்கங்களுடன் சிறிதளவில் மிதமடைவதற்கு முன்னர் எரிபொருள், மின்சாரம் மற்றும் திரவப் பெற்றோலிய எரிவாயு விலைகளுக்கான மேல்நோக்கிய

சீராக்கங்களைத் தொடர்ந்து 2026 இரண்டாம் காலாண்டில் குறிப்பிடத்தக்களவில் துரிதமடைந்தது. நிலவுகின்ற உயர்ந்தளவிலான விலை மட்டங்களின் தாக்கத்தைப் பிரதிபலித்து, வலு மற்றும் போக்குவரத்துப் பணவீக்கம் அண்மைக் காலத்தில் உயர்வடைந்து காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. வானிலை தொடர்புபட்ட நிச்சயமற்றதன்மைகளும் வலு பணவீக்கத்திற்கான தோற்றப்பாட்டினை உயர்வடைந்த வலு உருவாக்கச் செலவினூடாக வடிவமைக்கும். அதன்பின்னர், மத்திய கிழக்கின் பதற்றங்களின் தாக்கங்களும் அவற்றின் கசிவுத்தாக்கங்களும் தற்காலிகமானவையாகவும் படிப்படியாக குறைவடையும் என எதிர்பார்க்கப்படும் ஊகத்தின் கீழ், வலு மற்றும் போக்குவரத்துப் பணவீக்கமானது எறிவு வீச்சின் எஞ்சிய பகுதியில் படிப்படியாக மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**வரைபடம் 04: வலு மற்றும் போக்குவரத்து பணவீக்கம்: உத்வேகம் மற்றும் தளத்தாக்கம் (கொ.நு.வி.சுட்டெண், 2021=100)[6]**




மூலம்: இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் கணிப்புக்கள்

தளம்பல்மிக்க உணவுப் பணவீக்கம், நடுத்தர காலத்தில் படிப்படியாக தளர்வடைவதற்கு முன்னர் அண்மைக் காலத்தில் உயர்வடைந்து காணப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. 2026 யூனில் அவதானிக்கப்பட்ட தளம்பல்மிக்க உணவு விலைகளின் அதிகரிப்பு, குறிப்பாக காய்கறிகள் மற்றும் மீன்களுக்கான விலை அதிகரிப்புடன் இணைந்து உயர்ந்தளவிலான போக்குவரத்துச் செலவுகளும் அண்மைக்காலத்தில் உணவு பணவீக்கத்தின் மீது மேல்நோக்கிய அழுத்தத்தைச் செலுத்தலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், தளம்பல்மிக்க உணவுப் பணவீக்கமானது வானிலையுடன் தொடர்புபட்ட நிச்சயமற்றதன்மைகளுக்கு உட்பட்டு காணப்படுவதுடன், இது எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க பாரியளவிலான விலைத் தளம்பலுக்கு வழிவகுக்கக்கூடும். எனினும், அவ்வபிவிருத்திகள் அவற்றின் எதிர்வுகூறமுடியாத இயல்பின் காரணமாக எறிவுகளுக்கு உள்வாங்குவதற்கு இயல்பிலேயே கடினமாக காணப்படுவதனால், பணவீக்க எறிவுகளின் அடைவிற்கான இடர்நேர்வுகளாக கருதப்படுகின்றன.

[6] தளத்தாக்கம் மற்றும் உத்வேகம் தொடர்பான விரிவான கலந்துரையாடலுக்கு நாணயக் கொள்கை அறிக்கை – ஓகத்து 2025 இன் சிறப்புக் குறிப்பு அ இனைப் பார்க்க.

**வரைபடம் 05: முதன்மைப் பணவீக்கம்: உத்வேகம் மற்றும் தளத்தாக்கம் (கொ.நு.வி.சுட்டெண், 2021=100)[6]**




மூலம்: இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் கணிப்புக்கள்

**பணவீக்க எதிர்பார்க்கைகள்**

மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள் அளவீட்டின் படி, கம்பனித் துறையின் பணவீக்க எதிர்பார்க்கைகள் வெவ்வேறு அளவுகளிலேனும் 2026இன் முதலாம் அரையாண்டுக் காலப்பகுதியில் அனைத்து வீச்சுக்களிலும் அதிகரித்தன. 3 மாத மற்றும் 1 ஆண்டிற்கு அப்பாலான காலங்களினைக் கொண்ட குறுங்காலப் பணவீக்க எதிர்பார்க்கைகள் 2026 சனவரி தொடக்கம் 2026 யூன் வரை குறிப்பிடத்தக்களவு அதிகரித்து, இக்காலப்பகுதியில் உண்மைப் பணவீக்கத்தில் ஏற்பட்ட அபிவிருத்தியினைப் பரந்தளவில் பிரதிபலித்தன. குறிப்பாக, ஆண்டின் முற்பகுதியில் பணவீக்கமானது ஒப்பீட்டளவில் குறைவாகவும் உறுதிநிலையாகவும் காணப்பட்டதனைத் தொடர்ந்து முதன்மைப் பணவீக்கத்தில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்புடன் இணைந்து, 3 மாதத்திற்கு அப்பாலான காலப்பகுதியிலான எதிர்பார்க்கைகள் 2026 ஏப்பிறலில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. குறுங்காலப் பணவீக்க எதிர்பார்க்கைகளின் மேல்நோக்கிய நகர்வும் உலகளாவிய வலு விலைகள், நிரம்பல் சங்கிலி இடையூறுகள் மற்றும் ஏனைய செலவு அழுத்தங்கள் குறித்த கரிசனைகள் உள்ளடங்கலாக மத்திய கிழக்கின் புவிசார் அரசியல் பதற்றங்களைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையினை உயர்வடையச்செய்துள்ளது. இருப்பினும், எதிர்பார்க்கைகள் 5 சதவீதம் கொண்ட பணவீக்க இலக்கினை அண்மித்துப் பரந்தளவில் நிலைநிறுத்தப்பட்டிருந்ததுடன் நடுத்தரகால எதிர்பார்க்கைகளின் அதிகரிப்பானது சிறியளவிலானதாகத் தொடர்ந்தும் காணப்பட்டது. குறுங்கால எதிர்பார்க்கைகள் இயல்பிலேயே பின்பற்றும் தன்மையினை கொண்டிருக்கும் வேளை நடுத்தரகால எதிர்பார்க்கைகளின் தொடர்ச்சியான நிலைநிறுத்துகையானது சராசரியாகக் கம்பனிகள் பணவீக்கத்தின் அண்மைய அதிகரிப்பினைக் குறுங்கால நிகழ்வொன்றாகக் கருதுவதனையும் பணவீக்கமானது நடுத்தர காலத்தில் இலக்கினை நோக்கி ஒருங்கிசைந்து செல்லும் என்பதில் தொடர்ந்து நம்பிக்கை கொண்டுள்ளதனையும் குறித்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 06: பணவீக்க எதிர்பார்க்கைகள் - கம்பனித் துறை (%)**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

குறிப்பு

இவ்வரைபடமானது மாதாந்த ரீதியாக நடாத்தப்படுகின்ற பணவீக்க எதிர்பார்க்கைகள் அளவீட்டின் தொடர்ச்சியான சுற்றுக்களில் அறிக்கையிடப்பட்டவாறான கம்பனித் துறைப் பணவீக்க எதிர்பார்க்கைகளை எடுத்துக்காட்டுகின்றது. கிடை அச்சானது அளவீட்டுச் சுற்றுக்களைப் (மாதாந்த) பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வேளையில் ஒவ்வொரு கோடும் 3 மாதங்கள், 1 ஆண்டு, 2 ஆண்டுகள் மற்றும் 3 ஆண்டுகள் ஆகிய வேறுபட்ட கால எல்லைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற பணவீக்கத்தினைக் குறித்துரைக்கின்றது. 3 மாத மற்றும் 1 ஆண்டு கால எல்லைகள் குறுங்கால எதிர்பார்க்கைகளை எடுத்துக்காட்டுவதுடன் 2 ஆண்டுகள் மற்றும் 3 ஆண்டுகள் கொண்ட கால எல்லைகள் நடுத்தரகால எதிர்பார்க்கைகளைப் பிரதிபலிக்கின்றன. ஒவ்வொரு தொடரின் மாற்றங்களும் எதிர்பார்க்கைகள் காலப்போக்கில் எவ்வாறு மாற்றமடைகின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

**உண்மைப் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள்**

முன்னணிப் பொருளாதாரக் குறிகாட்டிகள், அளவீட்டுக் கண்டறிகைகள் மற்றும் அலுவலர் மதிப்பீடுகள் என்பவற்றின் அடிப்படையில், 2026இன் இரண்டாம் காலாண்டின் உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சியானது கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளின் செயலாற்றத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தொடர்ந்தும் நிலையாகக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய கிழக்கின் புவிசார் அரசியல் பதற்றங்களிலிருந்தான பொருளாதாரக் கசிவுத் தாக்கங்கள் முன்னர் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைந்தளவிலான தீவிரத்தன்மையினைக் கொண்டுள்ளமைக்கு மத்தியில் அண்மைக்கால வளர்ச்சி வாய்ப்புக்கள் பரந்தளவில் சாதகமாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றன. அதேவேளை, மேம்படுகின்ற உள்நாட்டுக் கேள்வி மற்றும் தொடர்ச்சியான பேரண்டப்பொருளாதார உறுதிப்பாடு என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, நடுத்தரகால வளர்ச்சிப் பாதையானது அதன் உள்ளாற்றல்வாய்ந்த தன்மையினை நோக்கிப் படிப்படியாக வலுவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், உள்நாட்டுக் கேள்வியின் அதிகரிப்பானது அண்மைய நாணயக் கொள்கை இறுக்கமடைதலின் ஊடுகடத்தலினைப் பகுதியளவில் பிரதிபலிக்கின்ற விதத்தில் ஓரளவு படிப்படியானதாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நடுத்தரகாலப் பொருளாதார வளர்ச்சித் தோற்றப்பாடானது புவிசார் அரசியல் முன்னேற்றங்கள் மற்றும் மாற்றமடைந்துவருகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிலைமைகள் மற்றும் காலநிலை சார்ந்த இடர்நேர்வுகள் ஆகியவற்றுடன் இணைந்த உயர்வடைந்த நிச்சயமற்றதன்மைக்கு உட்பட்டுக் காணப்படுகின்றதென்பது குறிப்பிடத்தக்கதாகும். மத்திய கிழக்கில் மீண்டும் தோற்றம்பெற்றுள்ள புவிசார் அரசியல் பதற்றங்கள் உலகளாவிய வலுச் சந்தைகள், வர்த்தகப் பாய்ச்சல்கள், நிரம்பல் சங்கிலிகள் மற்றும் முதலீட்டாளர் மனோபாவம் என்பவற்றுடன் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளிற்கான சாத்தியமான கசிவுத்தாக்கங்களுடாகவும் பாதகமாகத் தாக்கம் செலுத்தக்கூடும். உலகளாவிய வர்த்தகம்

மற்றும் கொள்கை நிச்சயமற்றதன்மைகளுக்கு மத்தியில், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களில் ஏற்படுகின்ற அபிவிருத்திகளும் எதிர்வருகின்ற காலத்தில் இலங்கையின் வளர்ச்சிப் பாதையினை வடிவமைக்கும். அதேவேளையில், மீண்டெழும் பாதகமான வானிலை சார்ந்த அதிர்வுகள் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்திற்கான வளர்ச்சியினை முடக்கக்கூடுமென்பது நீடித்துநிலைத்திருக்கின்ற மற்றும் காலநிலைத் தாக்குப்பிடிக்குந்தன்மையினைக்கொண்ட பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிக்கின்ற கொள்கைகளிற்கான அவசியத்தினை வலியுறுத்துகின்றது. இப்பின்னணியில், தற்போதைய பொருளாதார வளர்ச்சி உத்வேகத்தின் தொடர்ச்சி, இலக்கிடப்பட்ட கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் மற்றும் வளர்ச்சியினை மேம்படுத்துகின்ற உபாயங்களைக் காலந்தவறாமலும் செயற்றிறன்மிக்க விதத்திலும் நடைமுறைப்படுத்துவதன் மீதான நிபந்தனைக்குட்பட்டுக் காணப்படுகின்றது.

**வரைபடம் 07: அடிப்படை காலாண்டு உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி எதிர்வுகூறல் (ஆண்டிற்காண்டு)**

**2026 யூலை நாணயக் கொள்கைச் சுற்றின் போதான எறிவுகளை அடிப்படையாகக் கொண்டது**




மேலே வரைபடம் 02 இலுள்ள விளக்கக்குறிப்பினைப் பார்க்க.

மூலம்: இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் எறிவுகள்

## 2.2. எதிர்வுகூறலுக்கு அடிப்படையாகவிருக்கும் முக்கிய எடுகோள்கள்

2026 யூலை மாத நாணயக் கொள்கைச் சுற்றில் நடுத்தர கால எதிர்வுகூறல்களை அடைவதில் பயன்படுத்தப்பட்ட முக்கிய எடுகோள்களின் சுருக்கமொன்று இப்பகுதியில் தரப்பட்டுள்ளது.

**உலகளாவிய சூழல்**

மத்திய கிழக்கில் தொடரும் புவிசார் அரசியல் பதற்றங்களிற்கு மத்தியில், உலகளாவிய பொருளாதார நிலைமைகள் உயர்வடைந்த நிச்சயமற்றதன்மைக்குத் தொடர்ந்தும் உட்பட்டதாகக் காணப்படுகின்றன. உலகளாவிய எறிவுகள் மாதிரி வலையமைப்பிற்கமைய,[7] ஏற்றுமதி நிறையேற்றப்பட்ட வெளிநாட்டு

[7] மத்திய வங்கியானது நடுத்தரகால எறிவுகளுக்கான உள்ளீடுகளாக உலகளாவிய எறிவு மாதிரியுரு வலையமைப்பினால் தயாரிக்கப்பட்ட உலகளாவிய பேரண்டப்பொருளாதார குறிகாட்டிகளின் எறிவுகளைப் பயன்படுத்துகின்றது. 2026 யூலை நாணயக் கொள்கைச் சுற்றில் பயன்படுத்தப்பட்ட எறிவுகள் 2026 யூன் 24 அன்று கிடைக்கப்பெற்ற உலகளாவிய எறிவு மாதிரியுரு வலையமைப்பிலிருந்தான இற்றைப்படுத்தலினை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இவ்விற்றைப்படுத்தலிற்குப் பின்னர், மத்திய கிழக்கில் பதற்றங்கள் மீண்டும் தோற்றம்பெற்றுள்ளதுடன், இதன்விளைவாக உலகளாவிய வலு விலைகளில் புதுப்பிக்கப்பட்ட தளம்பல்தன்மை ஏற்பட்டுள்ளதுடன், இது அண்மைய காலப் பணவீக்க எறிவுகளினுள் பொருத்தமானவாறு உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும், அடிப்படை எதிர்வுகூறலிற்குத் துணைபுரிகின்ற உலகளாவிய ஊகங்களின் வலுவாந்தன்மையை மதிப்பிடும்போது ஏனைய பன்னாட்டு நிறுவனங்களின் எறிவுகளையும் மத்திய வங்கி பரிசீலனையில் கொள்கின்றது.

வெளியீட்டு இடைவெளியானது[8] நடுத்தர காலத்தில் நடுநிலையான மட்டங்களை நோக்கிச் சுருக்கமடைவதற்கு முன்னர் அண்மைய காலத்தில் எதிர்க்கணியமாகத் தொடர்ந்தும் காணப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் நாணயக் கொள்கையானது 2026இல் மாற்றமின்றித் தொடருமென ஊகிக்கப்பட்டுள்ளது. பணவீக்கமானது இலக்கிற்கு மேலாகத் தொடர்ந்து காணப்படுகின்ற போதிலும், பெடரல் நிதியங்களின் வீதமானது அதன்பின்னரான படிப்படியான தளர்வொன்றினைத் தொடங்குவதற்கு முன்னர் 2027 முழுவதும் அதன் தற்போதைய மட்டத்தில் பேணப்படக்கூடுமென உலகளாவிய எறிவுகள் மாதிரி வலையமைப்பு எறிவுசெய்கின்றது. பிரெண்ட் மசகெண்ணெய் விலைகள் 2026இல் பீப்பாயொன்றிற்குச் சராசரியாக ஏறத்தாழ ஐ.அ.டொலர் 80 ஆகவும் 2027இல் பீப்பாயொன்றிற்கு ஏறத்தாழ ஐ.அ.டொலர் 70 ஆகவும் காணப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளன. அதேவேளை, மேம்பட்ட உலகளாவிய நிரம்பல் நிலைமைகளிற்கான வாய்ப்புக்களினால் ஆதரவளிக்கப்பட்டு, உலகளாவிய உணவு விலைகள் மூன்று ஆண்டுகால உயர் மட்டமொன்றினை அண்மித்துக் காணப்படுகின்ற போதிலும், அவை நடுத்தர காலத்தில் படிப்படியாக மிதமடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளன. மேலே கலந்துரையாடப்பட்ட தகவல்களின் வெளியீட்டினைத் தொடர்ந்து, மத்திய கிழக்கில் பதற்றங்கள் மீண்டும் தோற்றம்பெற்றுள்ளதுடன், இது வலு மற்றும் பண்ட விலைகளிலும் ஒட்டுமொத்த வெளிநாட்டுத் துறைத் தோற்றப்பாட்டிலும் மேலதிக தளம்பலொன்றினைத் தோற்றுவித்துள்ளது. இருப்பினும், நடுத்தரகால எறிவுகளை உருவாக்குவதற்கான உள்ளீடொன்றாகப் பயன்படுத்தப்படுகின்ற அண்மைக்கால எதிர்வுகூறல்களை எட்டுவதில் இவ்வண்மைய அபிவிருத்திகள் பரிசீலனையில் கொள்ளப்பட்டுள்ளன.

[8] இலங்கையின் ஆறு முக்கிய வர்த்தகப் பங்காளர்களுடன் தொடர்புடைய ஏற்றுமதிகளின் இயல்புநிலைப்படுத்தப்பட்ட பங்குகளைப் பயன்படுத்தி உலகளாவிய எறிவு மாதிரி வலையமைப்பின் எறிவுகளில் தரப்பட்டுள்ள வர்த்தகப் பங்காளர்களின் நிறையேற்றப்பட்ட சராசரி வெளியீட்டு இடைவெளியொன்றாக ஏற்றுமதி நிறையேற்றப்பட்ட வெளிநாட்டு வெளியீட்டு இடைவெளியானது கணிக்கப்பட்டுள்ளது.

**வரைபடம் 08: உலகளாவிய எறிவுகள் (காலாண்டு)**




*குறிப்பு: அண்மைய உலகளாவிய எறிவு மாதிரியுரு வலையமைப்பு எறிவுகளில், கவனத்திற்கொள்ளப்படும் நாடுகளிலிருந்து முழுமையாக அடையப்பட்ட தரவுத் தொகுதி கிடைக்கும் வரை 2026இன் முதலாம் காலாண்டானது மிகவும் அண்மையில் அடையப்பட்ட காலப்பகுதியாகக் கருதப்படுகின்றது*

*மூலங்கள்: காலாண்டு எறிவு மாதிரி, உலக எறிவு மாதிரி வலையமைப்பு (2026/01/20 மற்றும் 2026/06/24 அன்று இற்றைப்படுத்தப்பட்டது.)*

**இறைப் பாதை**

தற்போதைய எறிவுகளில் இணைக்கப்பட்டுள்ள இறைப் பாதையுடன் தொடர்புடைய ஊகங்கள் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2026 யூனில் வெளியிடப்பட்ட 2027இற்கான இறை உபாய அறிக்கையிலிருந்தான தகவல்களுக்கமைய இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.

**வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு**

ஆரோக்கியமான பணவனுப்பல் பாய்ச்சல்களிற்கு மத்தியில், உயர்ந்தளவிலான எரிபொருள் மற்றும் வாகன இறக்குமதிகளால் உந்தப்பட்டு விரிவடைந்துவருகின்ற வர்த்தகப் பற்றாக்குறையொன்றினையும் சுற்றுலாத்துறையிலிருந்தான தாழ்ந்தளவிலான வருவாய்களின் காரணமாக பணிகள் கணக்கு மிகையில் ஏற்பட்ட மிதமடைதலொன்றினையும் பிரதிபலிக்கின்ற விதத்தில் கடந்த மூன்று ஆண்டுகலாக பதிவுசெய்யப்பட்ட மிகைகளுடன் ஒப்பிடுகையில் 2026இல் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையொன்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## 2.3. அடிப்படை எதிர்வுகூறல்களின் அடைவிற்கான இடர்நேர்வுகள்

இவ்வறிக்கையில் வழங்கப்பட்டுள்ள பணவீக்கம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி என்பவற்றுக்கான அடிப்படை எறிவுகளை அடைவதற்கு மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் ஆகிய இரண்டும் காணப்படுகின்றன. 2026 யூலை நாணயக் கொள்கை சுற்றிற்கமைய இத்தகைய இடர்நேர்வுகள் பற்றிய விளக்கம் இப்பிரிவில் வழங்கப்பட்டுள்ளது. இப்பிரிவில் ஆராயப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடர்நேர்வுகளின் அடைவானது எறிவுசெய்யப்பட்ட அடிப்படைப் பாதையிலிருந்து உண்மைப் பணவீக்கத்தின் மற்றும்/அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியின் விலகலுக்கு வழிவகுக்கக்கூடும். மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் ஆகிய இரண்டும் அடையப்பெறுகின்ற சந்தர்ப்பத்தில், அடையப்பட்ட பணவீக்கம் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியின் போக்கானது இவ்விடர்நேர்வுகளின் ஒப்பீட்டு வலிமையினால் வடிவமைக்கப்படும்.

**பணவீக்க எதிர்வுகூறல்களின் அடைவிற்கான இடர்நேர்வுகள்**

பல மேல்நோக்கிய இடர்நேர்வுகள் பணவீக்கத்தினை எறிவுசெய்யப்பட்ட பாதையிலும் பார்க்க உயர்வான எறிவுப்பாதையொன்றில் செலுத்தக்கூடும். புவிசார் அரசியல் பதற்றங்களின் தீவிரமடையக் கூடிய சாத்தியக்கூறுகளால் உலகளாவிய பண்டச் சந்தைகள், வலு நிரம்பல்கள் மற்றும் கப்பற்பயண வழிகள் போன்றவற்றில் ஏற்படக்கூடிய இடையூறுகளூடாக ஏற்படுத்தி அதனூடாக உள்நாட்டு வலு மற்றும் போக்குவரத்துச் செலவுகள் மற்றும் வளமாக்கிகளின் விலைகள் அதிகரிப்பதற்கு வழிவகுக்கக்கூடிய சாத்தியக்கூறுகளில் இருந்து மேல்நோக்கிய இடர்நேர்வுகள் தோற்றம்பெறக்கூடும். பாதகமான சந்தை மனோபாவம் மற்றும் வெளிநாட்டு அதிர்வுகள் என்பவற்றிலிருந்து தோற்றம்பெறுகின்ற உயர்ந்தளவிலான மட்டங்களிலான இலங்கை ரூபாவின் பெறுமதித்தேய்வின் சாத்தியப்பாடானது இறக்குமதிசெய்யப்படும் பொருட்கள் மற்றும் உற்பத்தி உள்ளீடுகள் என்பவற்றின் உள்நாட்டு விலைகளை அதிகரித்து அதன்மூலம், பணவீக்கத்தின் மீது மேலும் மேல்நோக்கிய அழுத்தத்தினை ஏற்படுத்தக்கூடும். மேலும், எல்-நினோ நிலைமைகள் உள்ளடங்கலாக சாத்தியமான பாதகமான வானிலை நிகழ்வுகள் வேளாண்மை உற்பத்தியினையும் நீர்மின் உருவாக்கத்தினையும் சீர்குலைத்து, உணவு மற்றும் வலுப் பணவீக்கத்தின் மீதான மேல்நோக்கிய அழுத்தத்தினை ஏற்படுத்தக்கூடும்.

அதேவேளை, புவிசார் அரசியல் பதற்றங்கள் தளர்வடைகின்ற பட்சத்தில், உலகளாவிய வலு விலைகளின் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க தாழ்ந்தளவிலான சாத்தியத்தன்மையிலிருந்து பணவீக்க எதிர்வுகூறல்களின் அடைவிற்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் தோன்றக்கூடும். இத்தகைய அபிவிருத்திகள் உள்நாட்டு வலு மற்றும் போக்குவரத்துச் செலவுகள் குறைவடைவதற்கு வழிவகுத்து, பணவீக்கமானது எறிவுசெய்யப்பட்டதிலும் பார்க்க தாழ்ந்தளவிலான பாதையொன்றினைப் பின்பற்றுவதற்கான சாத்தியத்தன்மையினைத் தோற்றுவிக்கக்கூடும்.

தற்போதைய நாணயக் கொள்கைச் சுற்றில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கமைய, பணவீக்க எறிவுகளிற்கான இடர்நேர்வுகள் அண்மைக் காலம் மற்றும் நடுத்தர காலம் ஆகிய இரண்டிலும் மேல்நோக்கிச் சார்ந்திருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளன.

**பொருளாதார வளர்ச்சி எறிவுகளின் அடைவிற்கான இடர்நேர்வுகள்**

அண்மைக் காலத்திலிருந்து நடுத்தர காலத்திற்கான வளர்ச்சி எறிவுகளினை அடைவதற்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் பல்வேறு காரணிகளிலிருந்து எழக்கூடும். மத்திய கிழக்கில் புவிசார் அரசியல் பதற்றங்கள் தீவிரமடைதல் மற்றும் உயர்வடைந்த உலகளாவிய வர்த்தகம் மற்றும் கொள்கைசார் நிச்சயமற்றதன்மைகள் என்பன இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் பொருளாதார நடவடிக்கைகளை நலிவடையச்செய்து, இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான வெளிநாட்டுக் கேள்வியினைக் குறைப்பதுடன் ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில் துறைகளைப் பாதகமாகப் பாதிப்படையச்செய்யக்கூடும். அதேவேளை, முக்கிய சுற்றுலா மூலச் சந்தைகளின் பலவீனமான பொருளாதார நிலைமைகள் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளையும் சுற்றுலாவுடன் தொடர்புடைய செலவிடல்களையும் குறைவடையச்செய்து, தங்குமிடம், உணவுப் பணிகள், போக்குவரத்து மற்றும் ஏனைய சுற்றுலாவுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும். எல்-நினோ நிலைமைகள், நீடித்த வறட்சி மற்றும் சீரற்ற மழைவீழ்ச்சிப் போக்குகள் என்பன உள்ளடங்கலாக பாதகமான வானிலை நிலைமைகளைத் தோற்றுவித்து, வேளாண்மை உற்பத்தியினையும் தொடர்புடைய பொருளாதார நடவடிக்கைகளையும் பாதகமாகப் பாதிக்கக்கூடும். மேலும், தாழ்ந்தளவிலான நீர்த்தேக்க மட்டங்கள் நீர்மின் உருவாக்கத்தினைக் கட்டுப்படுத்தி, அதிக செலவுமிக்க அனல் மின் உருவாக்கத்தின் மீதான சார்ந்திருத்தலை அதிகரிக்கச்செய்து, வலு மற்றும் உற்பத்திச் செலவுகளை அதிகரிக்கக்கூடும். ஒட்டுமொத்த அடிப்படையில், இவ்வபிவிருத்திகள் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் ஆகிய அனைத்து துறைகளின் பொருளாதார நடவடிக்கைகளில் தாக்கத்தினை ஏற்படுத்தி, தற்போது எறிவுசெய்யப்பட்டதிலும் பார்க்க தாழ்ந்தளவிலான வளர்ச்சிப் பாதையொன்றினைத் தோற்றுவிக்கக்கூடும்.

மாறாக, தனியார் துறைக் கொடுகடனின் நிலையான வளர்ச்சியானது மேம்பட்ட நுகர்வு மற்றும் முதலீடு என்பவற்றின் மூலம் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க வலுவான பொருளாதார நடவடிக்கைகளிற்கு ஆதரவளிக்கக்கூடும். வலுவான உள்நாட்டுக் கேள்வியானது வர்த்தகம், போக்குவரத்து மற்றும் ஏனைய பணியுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கும் நேர்க்கணிய கசிவுத்தாக்கங்களை உருவாக்கி அதன்மூலம், தற்போது எறிவுசெய்யப்பட்டதிலும் பார்க்க உயர்ந்தளவிலான வளர்ச்சிப் பாதையொன்றிற்கு ஆதரவளிக்கக்கூடும்.

## 2.4. முன்னைய எதிர்வுகூறலுடனான ஒப்பீடு

இந்தப் பகுதியானது 2026 சனவரி மாத நாணயக் கொள்கைச் சுற்றின் போது பெறப்பட்டு, 2026 பெப்புருவரி மாத நாணயக் கொள்கை அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்ட எதிர்வுகூறலுடன் தற்போதைய எதிர்வுகூறல்களினை ஒப்பிடுகின்றது. 2026 பெப்புருவரி நாணயக் கொள்கை அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்ட எதிர்வுகூறல்கள் மத்திய கிழக்கில் புவிசார் அரசியல் பதற்றங்கள் தீவிரமடைவதற்கு முன்னர் தயாரிக்கப்பட்டவையாகும். இருப்பினும், தற்போதைய எதிர்வுகூறல்கள் இவ்வபிவிருத்திகளின் தாக்கத்தினை உள்ளடக்கின்றன. இதன்விளைவாக, அடிப்படை எதிர்வுகூறலிற்குத் துணைபுரிகின்ற பல முக்கிய எடுகோள்கள் திருத்தப்பட்டுள்ளன.

**நடுத்தரகால எறிவுகளுக்குப் பயன்படுத்தப்படும் முக்கிய எடுகோள்கள்**

2026 யூலை மாத நாணயக் கொள்கைச் சுற்றின் போது பயன்படுத்தப்பட்ட உலகளாவிய எறிவுகளின் அடிப்படையில், 2026 பெப்புருவரி நாணயக் கொள்கை அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்டு, 2026 சனவரி மாத நாணயக் கொள்கைச் சுற்றில் பயன்படுத்தப்பட்ட உலகளாவிய எறிவுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் ஏற்றுமதி நிறையேற்றப்பட்ட வெளிநாட்டு வெளியீட்டு இடைவெளிக்கான தோற்றப்பாடானது பலவீனமடைந்துள்ளது. இந்தத் திருத்தமானது ஐரோப்பிய வலயம், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகியவற்றிற்கான பலவீனமான வளர்ச்சி வாய்ப்புக்களினை முக்கியமாகப் பிரதிபலிப்பதுடன், இதற்கு மத்திய கிழக்கில் நிலவுகின்ற புவிசார் அரசியல் பதற்றங்களின் கசிவுத்தாக்கங்கள் பகுதியளவிலான காரணமாயமைகின்றன. 2026 சனவரி மாத நாணயக் கொள்கைச் சுற்றின் போது பயன்படுத்தப்பட்ட எறிவுகளுடன் ஒப்பிடுகையில், உலகளாவிய உணவுப் பணவீக்கமானது அதன்பின்னர் தாழ்ந்தளவிலான பாதையொன்றிற்கு மிதமடைவதற்கு முன்னர் 2027இன் முதலாம் அரையாண்டு வரை உயர்ந்தளவிலான பாதையொன்றினைப் பின்தொடருமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. அதேவேளை, உலக எண்ணெய் விலைகளின் எறிவுசெய்யப்பட்ட பாதையானது குறிப்பாக, அண்மைக் காலத்தில், குறிப்பிடத்தக்களவு மேல்நோக்கித் திருத்தப்பட்டுள்ளமையானது மத்திய கிழக்கில் பதற்றங்களின் தீவிரமடைதல், முக்கிய கப்பற்பயண வழிகளிற்கான இடையூறுகள் மற்றும் தொடர்புடைய உயர்ந்தளவிலான நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றினைப் பிரதிபலிக்கின்றது. ஐக்கிய அமெரிக்காவில் நாணயக் கொள்கைத் தளர்வடைதலின் எதிர்பார்க்கப்பட்ட வேகமும் 2026 சனவரி மாத எறிவுகளுடன் ஒப்பிடுகையில் மிதமடைந்துள்ளது.

உள்நாட்டுப் பக்கத்தில், தற்போதைய எறிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ள இறைப் பாதையானது 2027இற்கான இறை உபாய அறிக்கையிலிருந்தான தகவல்களின் அடிப்படையில் இற்றைப்படுத்தப்பட்டுள்ள வேளையில் 2026 சனவரி மாத நாணயக் கொள்கைச் சுற்றின் போது மேற்கொள்ளப்பட்ட எறிவுகள் 2026இற்கான குறைநிரப்பு வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டிருந்தன. மேம்பட்ட அரசிறைச் செயலாற்றத்தினைக் கருத்திற்கொண்டு, தற்போதைய எறிவானது 2026இற்கான தாழ்ந்தளவிலான வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையொன்றினைக் கொண்டுள்ளது.

**பணவீக்கப் பாதை**

2026 பெப்புருவரி நாணயக் கொள்கை அறிக்கையில் வெளியிடப்பட்ட எறிவுகளுடன் ஒப்பிடுகையில் 2026இன் முதலாம் காலாண்டில் அடையப்பட்ட ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கமானது எறிவுசெய்யப்பட்ட மட்டத்துடன் பரந்தளவில் இசைவாகக் காணப்பட்டது. இருப்பினும், மத்திய கிழக்கில் பதற்றங்கள் தொடங்கியதினைத் தொடர்ந்து ஏற்பட்ட உயரந்தளவிலான வலு விலைகளினை முக்கியமாகப் பிரதிபலித்து, 2026இன் இரண்டாம் காலாண்டில் அடையப்பட்ட பணவீக்கமானது முன்னர் எறிவுசெய்யப்பட்டதிலும் பார்க்க உயர்ந்தளவில் காணப்பட்டது. அண்மைய முதன்மைப் பணவீக்க எறிவுகளும் முன்னைய நாணயக் கொள்கை அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்ட பாதைக்குக் குறிப்பாக, 2026இன் எஞ்சிய காலப்பகுதியிலும் 2027இன் முற்பகுதியிலும், தொடர்ந்தும் மேலாகக் காணப்படுகின்றமைக்கு பிரதானமாக உயர்வடைந்த உணவு விலைகளுடன் இணைந்து உயர்ந்தளவிலான வலு விலைகள் காரணமாயமைந்தன. அண்மைக் கால அதிகரிப்பினைத் தொடர்ந்து, மத்திய கிழக்கில் நிலவுகின்ற பதற்றங்கள் படிப்படியாகத் தணிவடைகின்றதெனும் எடுகோளின் கீழ், உயர்ந்தளவிலான வலு விலைகளின் தாக்கம் குறைவடைவதனால் பணவீக்கமானது மிதமடையுமென எறிவுசெய்யப்படுகின்றது. முன்னைய எறிவிற்கு ஒத்திசைவாக, முதன்மைப் பணவீக்கமானது நடுத்தர காலத்தில் இலக்கினை நோக்கி ஒருங்கிசைந்துசெல்லுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# 3. தற்போதைய பொருளாதார அபிவிருத்திகள்

## 3.1. பணவீக்கம்

***ஆண்டின் ஆரம்ப மாதங்களில் குறைவடைந்திருந்த முதன்மைப் பணவீக்கமானது அதன்பின்னர் துரிதமடைந்து 5 சதவீத இலக்கினை ஏப்பிறலில் விஞ்சியதுடன், மத்திய கிழக்கில் ஏற்பட்ட யுத்தத்தினைத் தொடர்ந்து உலகளாவிய எண்ணெய் விலைகளின் அதிகரிப்பு உள்நாட்டு வலு விலைகளுக்கு ஊடுகடத்தப்பட்டதைப் பிரதிபலித்தது.***

**வரைபடம் 09: முதன்மை மற்றும் மையப் பணவீக்கத்தின் அசைவுகள் (கொ.நு.வி.சுட்டெண், 2021=100)**




மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2026 சனவரியில் 2.3 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினை (2021=100) அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டிற்காண்டு) முக்கியமாக உணவுப் பணவீக்கத்தில் ஏற்பட்ட மிதமடைதல் காரணமாக 2026 பெப்புருவரியில் 1.6 சதவீதத்திற்கு குறைவடைந்தது. அதன்பின்னர், புள்ளிவிபரத் தளத் தாக்கத்துடன் இணைந்து, அதிகரிக்கின்ற உணவல்லாப் பணவீக்கத்தினால் உந்தப்பட்டு, முதன்மைப் பணவீக்கமானது 2026 மாச்சில் 2.2 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. எனினும், 2026 ஏப்பிறலில், கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம், 5.4 சதவீதத்திற்கு சடுதியாக உயர்வடைந்து, 5 சதவீத இலக்கினை விஞ்சியது. இம் மேல்நோக்கிய போக்கானது 2026 பெப்புருவரியின் பிற்பகுதியில் மத்திய கிழக்கில் யுத்தம் தீவிரமடைந்ததால் தோற்றம்பெற்ற வெளிப்புற கசிவுத்தாக்கத்தினால் பாரியளவில் துணையளிக்கப்பட்டதோடு, இது ஹோர்முஸ் நீரிணையினூடாக செல்லும் உலகளாவிய எரிபொருள் நிரம்பலிற்கும் கப்பலேற்றலிற்கும் இடையூறினை ஏற்படுத்தி, உயர்ந்தளவிலான உலகளாவிய வலு விலைகளின் அதிகரிப்பிற்கு வழிவகுத்ததோடு உள்நாட்டு எரிபொருள் மற்றும் திரவப் பெற்றோலிய வாயு விலைகளுக்கான மேல்நோக்கிய திருத்தங்களை தேவைப்படுத்தியது. முதன்மைப் பணவீக்கமானது அடுத்தடுத்த மாதங்களில் உயர்வடைந்து காணப்பட்டு, 2026[9] யூனில் 6.8 சதவீதத்திற்கு மேலும் அதிகரித்ததோடு, உணவு நிரம்பல் சங்கிலிகள் மீதான தொடர்புடைய இரண்டாம் சுற்று தாக்கங்களுடன் இணைந்து, தொடர்ச்சியான வலு விலைச் சீராக்கங்களின் ஊடுகடத்தலைப் பிரதிபலித்தது. மீளாய்விற்குரிய காலப்பகுதியில், கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட உணவுப்

[9] கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டிற்காண்டு) 2026 யூனின் 6.8 சதவீதத்திலிருந்து 2026 யூலையில் 7.3 சதவீதத்திற்கு அதிகரித்து, பிரதானமாக உணவல்லா வகையில் வீட்டு வாடகையில் சீராக்கத்தினையும் உணவுப் பணவீக்கத்தில் தளத் தாக்கத்தினையும் பிரதிபலித்தது.

பணவீக்கம் (ஆண்டிற்காண்டு) 2026 சனவரியின் 3.3 சதவீதத்திலிருந்து 2026 பெப்புருவரியில் 0.2 சதவீதத்திற்கு குறைவடைந்ததுடன் இது அண்மைய மாதங்களில் மிகக்குறைந்த அளவாகக் காணப்படுகின்றது. அதன்பின்னர், இடைக்கிடையான தளம்பல் இருந்தபோதிலும் இது பரந்தளவிலான அதிகரித்த போக்கொன்றைப் பின்தொடர்ந்து, 2026 யூனில் 3.6 சதவீதத்தை அடைந்தது. உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டிற்காண்டு), அதே காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவில் துரிதமடைந்து, 2026 சனவரியின் 1.8 சதவீதத்திலிருந்து 2026 யூனில் 8.4 சதவீதத்திற்கு அதிரித்ததோடு, உள்நாட்டு எரிபொருள், திரவப் பெற்றோலிய வாயு, மற்றும் மின்சார விலைகள் என்பனவற்றில் மேல்நோக்கியச் சீராக்கங்களின் நேரடி மற்றும் மறைமுகத் தாக்கங்கள் ஆகிய இரண்டினையும் பிரதிபலித்தது. அதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் விலைச்சுட்டெண்ணினை (தே.நு.வி.சு, 2021=100) அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் (ஆண்டிற்காண்டு), 2026இன் முதலாம் அரைப்பகுதியில் இதுபோன்ற மேல்நோக்கிய போக்கொன்றைப் பின்தொடர்ந்து, 2026 சனவரியின் 2.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026 யூனில் 6.5 சதவீதத்தினைப் பதிவுசெய்தது.

**வரைபடம் 10: ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கத்தின் பங்களிப்பு (கொ.நு.வி.சுட்டெண், 2021=100)**




*குறிப்பு: பணிகள் தொடர்பான கூறுகள், பொருட்கள் மற்றும் பணிகளுக்கான ஒட்டுமொத்த (முதன்மை) நுகர்வோர் விலைச் சுட்டெண் கூடைகளிலிருந்து (2021=100) பிரித்தெடுக்கப்பட்டு, 2018 இற்கான தனிப்பட்ட நுகர்வோர் நோக்கத்தின் அடிப்படையில் வகைப்படுத்தும் முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.*

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**வரைபடம் 11: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகளுக்கான திருத்தங்கள்**




மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**வரைபடம் 12: துணைவகை ரீதியான ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (கொ.நு.வி.சுட்டெண், % புள்ளிகள்)**




குறிப்பு: கொ.நு.வி.சுட்டெண் கூடையின் துணை வகைகளின் நிறையேற்றங்கள் அடைப்புக்குறிக்குள் வழங்கப்பட்டுள்ளன. 2026 பெப்புருவரி நாணயக் கொள்கை அறிக்கை வெளியீட்டிலிருந்து அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கும் பொருட்டு, 2026 யூனிற்காக பிந்தி கிடைக்கப்பெறுகின்ற தரவுகள் 2025 திசெம்பரில் அறிக்கையிடப்பட்டவற்றுடன் ஒப்பிடப்பட்டுள்ளன.

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

மாதாந்த அடிப்படையொன்றில், கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கமானது 2026 சனவரியில் 0.6 சதவீதத்தினால் அதிகரித்து, *டித்வா* புயலுக்கு பின்னர் ஏற்பட்ட உணவு நிரம்பல் கட்டுப்பாடுகளையும் அதிகளவிலான வீட்டு வாடகையினால் ஏற்பட்ட உணவல்லா விலைகளின் அதிகரிப்புக்களையும் பிரதிபலித்தது. எனினும், பிரதானமாக பெரும்போக அறுவடையின் பெறுகையுடன் இணைந்து, *டித்வா* புயலினால் ஏற்பட்ட உணவு நிரம்பல் இடையூறுகள் இயல்புநிலையடைந்ததன் காரணமாக, 2026 பெப்புருவரியில் மாதாந்த அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கம் எதிர்க்கணியத்திற்குத் திரும்பலடைந்தது. அறுவடை காலம் தொடங்கியவுடன் உணவு விலைகளில் வீழ்ச்சி காணப்பட்டபோதிலும் உணவல்லா வகையில், குறிப்பாக எரிபொருளினதும் திரவப் பெற்றோலிய வாயுவினதும் உள்நாட்டு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் காரணமாக, மாதாந்த அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கம் 2026 மாச்சில் 0.3 சதவீதத்தினால் அதிகரித்தது. 2026 ஏப்பிறலின் தொடக்கத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட மின்சாரத் தீர்வைகளின் மேல்நோக்கியச் சீராக்கமானது எரிபொருள் மற்றும் திரவப் பெற்றோலிய வாயுவிற்கான தொடர்ச்சியான உள்நாட்டு விலைச் சீராக்கங்கள் மற்றும் உணவு விலைகளின் அதிகரிப்பு என்பனவற்றுடன் இணைந்து, ஏப்பிறலின் மாதாந்த முதன்மைப் பணவீக்கத்தில் 3.0 சதவீத அதிகரிப்பொன்றுக்கு வழிவகுத்ததோடு, அண்மைய மாதங்களில் மிக உயர்வான மட்டத்தைப் பதிவுசெய்திருந்தது. அதன்பின்னர், மாதாந்த முதன்மைப் பணவீக்கமானது 2026 யூனில் நேர்க்கணியமாகக் காணப்பட்டு, உணவு மற்றும் உணவல்லா வகைகள் ஆகிய இரண்டினாலும் உந்தப்பட்டது. 2026 யூனில் மாதாந்த முதன்மைப் பணவீக்கம் 2.1 சதவீதத்தினால் அதிகரித்தமையானது குறிப்பாக உடன் மீன் மற்றும் காய்கறிகள் போன்ற உணவு விலைகளில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பினால் பாரியளவில் தூண்டப்பட்டது.

**வரைபடம் 13: மாதாந்த முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (கொ.நு.வி.சுட்டெண், 2021=100)**




மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**வரைபடம் 14: முதன்மைப் பணவீக்க நிழற்படம் (கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)**




*குறிப்பு: 2023 சனவரிக்கு முந்தைய தரவுகள் கொ.நு.வி.சுட்டெண்ணை (2013=100) அடிப்படையாகக் கொண்டது, அதேவேளை 2023 சனவரியில் தொடங்கும் தரவுகள் கொ.நு.வி.சுட்டெண்ணை (2021=100) அடிப்படையாகக் கொண்டது. அடிப்படை நிறைகள் அடைப்புக் குறியினுள் தரப்பட்டுள்ளது, அவை கொ.நு.வி.சுட்டெண்ணை (2021=100) அடிப்படையாகக் கொண்டது. வகைவாரியான ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கம் (வெளியிடப்பட்டது). ஒவ்வொரு துணை வகையிலுள்ள உயரமானது வகையின் ஒப்பீட்ட ரீதியான தள நிறையினை எடுத்துக்காட்டுகின்றது.*

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

பொருளாதாரத்திலுள்ள உள்ளார்ந்த பணவீக்கப் போக்குளைப் பிரதிபலிக்கின்ற கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை (ஆண்டிற்காண்டு) அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கம் 2026 பெப்புருவரியில் ஏற்பட்ட சிறிதளவான வீழ்ச்சியினைத் தவிர, 2026 முதலாம் அரைப்பகுதியில் படிப்படியாக

துரிதமடைந்து, 2026 யூனில் 4.0 சதவீதத்தினை அடைந்தது. இவ்வாறான போக்கு மையப் பணவீக்கக் கூடையிலிருந்து நீக்கப்பட்டுள்ள வலு மற்றும் தளம்பல்மிக்க உணவுடன் தொடர்புடைய விலை அதிகரிப்புக்களினால் பாரியளவில் தூண்டப்பட்டமையினால், 2026 ஏப்பிறல் தொடக்கம் அவதானிக்கப்பட்ட முதன்மைப் பணவீக்கத்தின் சடுதியான அதிகரிப்பு மையப் பணவீக்கத்தில் முழுமையாகப் பிரதிபலிக்கப்படவில்லை. எனினும், மையப் பணவீக்கம் மீதான உள்நாட்டு வலு விலைகளுக்கான மேல்நோக்கிய சீராக்கங்களின் சில மறைமுகத் தாக்கங்கள் வெளிப்பட்டன. இதேபோன்று, தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கமும் (ஆண்டிற்காண்டு) 2026இன் முதலாம் அரைப்பகுதியில் அதன் மேல்நோக்கிய போக்கினைத் தொடர்ந்ததோடு, 2026 சனவரியின் 2.2 சதவீதத்திலிருந்து யூனில் 5.0 சதவீதத்திற்கு அதிகரித்தது.

***பணவீக்கம் 2026 மாச்சு மாதத்திலிருந்து துரிதமடைந்தமையினால் தனியார் மற்றும் பொதுத் துறைகளில் உண்மைக் கூலி வளர்ச்சியானது மிதமடைந்து காணப்பட்டமையினை அண்மையில் கிடைப்பனவாகவுள்ள கூலிக் குறிகாட்டிகள் வெளிப்படுத்துகின்றன.***

உண்மை முறைசாராத் தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணின் ஆண்டிற்காண்டு வளர்ச்சியானது 2026 மேயில் 2.8 சதவீதத்திற்கு மீட்சியடைவதற்கு முன்னர் சனவரியில் பதிவுசெய்யப்பட்ட 3.0 சதவீதத்திலிருந்து ஏப்பிறலில் 1.0 சதவீதத்திற்கு மிதமடைந்தது. இருப்பினும், துரிதமடைந்துவருகின்ற நுகர்வோர் விலைப் பணவீக்கமானது கொள்வனவுச் சக்தியில் தொடர்ந்து தாக்கம் செலுத்தியமையினால், உண்மைக் கூலி வளர்ச்சியானது ஆண்டின் தொடக்கத்தில் பதிவுசெய்யப்பட்ட மட்டத்துடன் ஒப்பிடுகையில் தொடர்ந்து மிதமடைந்து காணப்பட்டது.

பொதுத் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணின்படி, ஆண்டிற்காண்டு உண்மைக் கூலி வளர்ச்சியானது 2026 ஏப்பிறலில் 0.2 சதவீதத்திற்குச் சடுதியாக வீழ்ச்சியடைவதற்கு முன்னர் சனவரியில் பதிவுசெய்யப்பட்ட 7.2 சதவீதத்திலிருந்து மாச்சில் 7.3 சதவீதத்திற்குச் சிறியளவில் அதிகரித்தது. உண்மைக் கூலி வளர்ச்சியானது அதனைத்தொடர்ந்து எதிர்க்கணியமாகத் திரும்பலடைந்து, மே மாதத்தில் 0.4 சதவீதம் கொண்ட சிறியளவிலான சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தமையானது கொள்வனவுச் சக்தியின் குறைவடைதலொன்றினைக் குறித்துக்காட்டியது.

ஊழியர் சேமலாப நிதியத்தின் அடிப்படையிலான முறைசார் தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணானது தரவுகள் கிடைப்பனவாகவுள்ள காலப்பகுதியில் ஒப்பீட்டளவில் வலுவான உண்மைக் கூலி வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. அண்மைய மாதங்களுக்கான இலத்திரனியல் பங்களிப்புப் பதிவுகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ள தற்காலிக ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, ஆண்டிற்காண்டு உண்மைக் கூலி வளர்ச்சியானது 2026 சனவரியில் பதிவுசெய்யப்பட்ட 8.9 சதவீதத்திலிருந்து 2026 மாச்சில் 7.7 சதவீதத்திற்கு மிதமடைந்தது.

**வரைபடம் 15: முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2018=100), பொதுத் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2016=100) மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தை அடிப்படையாகக் கொண்ட முறைசார் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2017 சன=100) போன்றவற்றில் அசைவுகள்**




*2026 சனவரி தொடக்கம் மாச்சு வரையான சுட்டெண் பெறுமதிகள் தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

### 3.2. உண்மைத் துறை

***2025இல் அவதானிக்கப்பட்ட சாதகமான வளர்ச்சி உத்வேகத்தை நிலைநிறுத்தி, இலங்கைப் பொருளாதாரமானது 2026இன் முதலாம் காலாண்டில் தொடர்ந்தும் விரிவடைந்தது.***

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் பிரகாரம், பொருளாதாரமானது 2026இன் முதலாம் காலாண்டில் 5.1 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) விரிவடைந்து, 2025இன் தொடர்புடைய காலாண்டில் பதிவான 4.7 சதவீதத்தை விட உயர்வடைந்து காணப்பட்டது. இவ்விரிவாக்கமானது அனைத்து முக்கிய மூன்று பொருளாதார துறைகளிலிருந்து சாதகமானப் பங்களிப்புக்களினால் ஆதரவளிக்கப்பட்டது. வேளாண்மை நடவடிக்கைகளின் வளர்ச்சியானது எண்ணெய் சார்ந்த பழங்கள் (தேங்காய், செவ்விளநீர் மற்றும் செம்பனை எண்ணெய்), காடாக்கல், மரக்குற்றிகளாக்குதல் மற்றும் காய்கறி பயிர்செய்கை என்பனவற்றினால் பிரதானமாகத் தூண்டப்பட்டது. தொழிற்துறை நடவடிக்கைகளின் விரிவாக்கமானது கட்டடவாக்கம், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு, சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் என்பனவற்றின் வளர்ச்சியினால் பாரியளவில் ஆதரவளிக்கப்பட்டது. மேலும், பணிகள் நடவடிக்கைகளின் வளர்ச்சியானது நிதியியல் பணிகள், போக்குவரத்து, மற்றும் கணினி நிரலாக்கல், ஆலோசனை மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள் போன்றவற்றில் ஏற்பட்ட விரிவாக்கத்திற்கு பிரதான காரணமாக அமைந்தது.

**அட்டவணை 01: உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கான மதிப்பீடுகள் (ஆண்டிற்காண்டு, %) (தற்காலிகமானது)**

| பொருளாதார நடவடிக்கை | 2025 | | | | | 2026 |
|---|---|---|---|---|---|---|
| | கா1 | கா2 | கா3 | கா4 | வருடாந்தம் | கா1 |
| வேளாண்மை | -1.3 | 2.5 | 2.2 | 2.1 | 1.4 | 1.1 |
| கைத்தொழில் | 9.8 | 5.7 | 7.9 | 7.3 | 7.8 | 7.2 |
| பணிகள் | 2.7 | 4.0 | 3.6 | 3.1 | 3.3 | 3.4 |
| **மொ.உ.உற்பத்தி** | **4.7** | **5.0** | **5.3** | **4.8** | **5.0** | **5.1** |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

மத்திய கிழக்கின் யுத்தத்தினால் ஏற்பட்ட சவால்கள் காணப்பட்ட போதிலும், அனைத்து முக்கிய மூன்று துறைகளிலிருந்தான சாதகமானப் பங்களிப்புக்களினால் ஆதரவளிக்கப்பட்டு, பொருளாதாரமானது தொடர்ந்தும் விரிவடைந்துள்ளதென 2026இன் இரண்டாம் காலாண்டிற்கான கிடைக்கப்பெறுகின்ற முன்னணிக் குறிகாட்டிகள் எடுத்துக்காட்டுகின்றன. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2025இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2026 ஏப்பிறல் - மே காலப்பகுதிகளில் மெதுவான வேகத்தில் காணப்பட்டபோதிலும் சாதகமான ஆண்டிற்காண்டு வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. பொருளாதார நடவடிக்கையில் முன்னேற்றங்களைப் பிரதிபலித்து, தயாரிப்பு, பணிகள், மற்றும் கட்டடவாக்கம் போன்றவற்றுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் ஏப்பிறலில் அவதானிக்கப்பட்ட பருவகால வீழ்ச்சியின் பின்னர் மீளெழுச்சியடைந்தன. எனினும், சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2026இன் இரண்டாம் காலண்டில் வீழ்ச்சியடைந்து, சுற்றுலாத் துறையின் அண்மைய வளர்ச்சி உத்வேகத்தில் மிதமடைதலொன்றைப் பதிவுசெய்தன. மேலும், வேளாண்மைத் துறைக்கான கிடைக்கப்பெறும் குறிகாட்டிகள் வேளாண்மை நடவடிக்கைகளில் கலப்பான செயலாற்றமொன்றை எடுத்துக்காட்டுகின்றன.

**வரைபடம் 16: கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் மற்றும் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் அசைவுகள்**




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

செலவினத் துறையில், 2026இன் முதலாம் காலாண்டில் நுகர்வு மற்றும் முதலீடு ஆகிய இரண்டினாலும் ஆதரவளிக்கப்பட்டு, உள்நாட்டுக் கேள்வியானது நிலையான விலைகளில் பொருளாதார நடவடிக்கையின் பிரதான உந்துசக்தியாகக் காணப்பட்டது. நுகர்வில் ஏற்பட்ட அதிகரிப்பானது தனியார் நுகர்வின் வளர்ச்சிக்கு பிரதான காரணமாக அமைந்த அதேவேளை உயர்ந்தளவான மொத்த நிலையான மூலதன உருவாக்கம் முதலீட்டின் விரிவாக்கத்திற்கு ஆதரவளித்தது. எனினும், 2026இன் முதலாம் காலாண்டில் பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் ஏற்றுமதிகளை விடவும் அதிகரித்து காணப்பட்டமையினால், தேறிய வெளிநாட்டு கேள்வி மேலும் சுருக்கமடைந்தது. 2026இன் இரண்டாம் காலாண்டில், நுகர்வு மற்றும் முதலீடு ஆகிய இரண்டும் பொருளாதார நடவடிக்கைக்குத் தொடர்ந்தும் ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் தேறிய வெளிநாட்டுக் கேள்வி எதிர்க்கணியமாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

**அட்டவணை 02: ஒட்டுமொத்தக் கேள்வி (தற்காலிகமானது)**

| விடயம் | நிலையான (2015) விலைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2025 | | 2025 கா1 | | 2026 கா1 | |
| | ரூ.பில். | ஆண்டிற்கு ஆண்டு % | ரூ.பில். | ஆண்டிற்கு ஆண்டு % | ரூ.பில். | ஆண்டிற்கு ஆண்டு % |
| உள்நாட்டுக் கேள்வி | 13,453 | 6.4 | 3,501 | 6.2 | 3,827 | 9.3 |
| நுகர்வு | 10,134 | 5.3 | 2,375 | 2.8 | 2,514 | 5.9 |
| முதலீடு (மொத்த மூலதன உருவாக்கம்) | 3,319 | 9.8 | 1,127 | 14.2 | 1,312 | 16.5 |
| தேறிய வெளிநாட்டுக் கேள்வி | (325) | (138.4) | (25) | (209.8) | (174) | (607.4) |
| + பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் | 3,157 | 5.1 | 822 | 5.9 | 841 | 2.3 |
| - பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் | 3,481 | 10.8 | 846 | 12.3 | 1,015 | 19.9 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **13,129** | **5.0** | **3,477** | **4.7** | **3,653** | **5.1** |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## 3.3. நாணயத் துறை

**வட்டி வீதங்கள்**

***2026ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அதிகரித்த போக்கில் காணப்பட்ட சந்தை வட்டி வீதங்களும் அரச பிணையங்களின் விளைவு வீதங்களும், 2026 மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கை இறுக்கமடைதலைத் தொடர்ந்து மேலும் அதிகரித்து, கொள்கை வட்டி வீத உயர்வின் ஊடுகடத்தலைப் பிரதிபலித்தன.***

2026இன் தொடக்கத்தில் ஓரிரவு கொள்கை வீதத்துடன் ஒத்திசைந்திருந்த சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகளினால் ஏற்படுகின்ற திரவத்தன்மை உட்செலுத்தல்களை பிரதிபலித்து மிகைத் திரவத்தன்மை அதிகரித்ததால் ஓரிரவு கொள்கை வீதத்திற்குக் கீழாக வீழ்ச்சியடைந்தது. அதன்பின்னர், பரிணமித்துவரும் உலகளாவிய மற்றும் உள்நாட்டு நிலைமைகளைப் பிரதிபலிக்கும் வகையில், குறிப்பாக 2026 மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வீத அதிகரிப்பைத் தொடர்ந்து, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் ஓரிரவு கொள்கை வீதத்திற்கு மேல் தற்காலிகமாக

விலகுவதற்கு மத்திய வங்கி அனுமதித்தது. இதற்கமைவாக, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது 2026 யூன் இறுதியளவில் 9.23 சதவீதத்திற்கு உச்சமடைந்த பின்னர் ஒட்டுமொத்த சந்தைத் திரவத்தன்மையின் முன்னேற்றங்களுடன் இணைந்து படிப்படியாக குறைவடைந்தது. 2026 யூலை 21 அன்று, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம், ஓரிரவு கொள்கை வீதத்தை விடவும் 22 அடிப்படைப் புள்ளிகள் அதிகமாக 8.97 சதவீதமாகக் காணப்பட்டது.

சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தில் அவதானிக்கப்பட்ட மேல்நோக்கிய சீராக்கத்துடன் இசைந்துசெல்லும் வகையில், சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதமும் 2026 மே இறுதியிலிருந்து துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்திற்கு நெருங்கிய மட்டங்களுக்கு அதிகரித்தது. எனினும், ஒட்டுமொத்த மிகைத் திரவத்தன்மை மட்டங்களின் முன்னேற்றத்துடன், சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதம் 2026 யூலை 21இல் 9.00 சதவீதமாக மிதமடைந்தது.

**வரைபடம் 17: ஓரிரவு கொள்கை வீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தின் அசைவுகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

குறுகிய கால கடன்வழங்கலுக்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் அதன் முதனிலை வாடிக்கையாளர்களுக்கு விதிக்கின்ற வீதங்களைப் பிரதிபலிக்கின்ற வாராந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதமானது 2026இன் தொடக்கக் காலப்பகுதியில் இடைக்கிடையான தளம்பல்களை காண்பித்த அதேவேளை பரந்தளவிலான மேல்நோக்கிய போக்கொன்றைப் பேணியிருந்தது. இம்மேல்நோக்கிய போக்கு தொடர்ந்தும் காணப்பட்டுள்ளதுடன் 2026 மே இறுதியிலிருந்து மேலும் வலுவடைந்தது. இதற்கமைவாக, மாதாந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதமானது 2026இன் இதுவரையான காலப்பகுதியில் தொடர்ந்தும் அதிகரித்து, யூன் [10] இறுதியளவில் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 147 அடிப்படைப் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தது. இதில், 59 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பானது கொள்கை வட்டி வீத இறுக்கமடைதலைத் தொடர்ந்து பதிவுசெய்யப்பட்டதாகும்.

[10] மாதாந்தச் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதமானது 2026 யூலை இறுதியளவில் 10.50 சதவீதத்திற்கு அதிகரித்து, ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 163 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தது.

2026இன் தொடக்க மாதங்களில் ஓரளவு கலவையான அசைவுகளைத் தொடர்ந்து, சந்தை வட்டி வீதங்கள் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியதுடன் 2026 மே மாதத்தின் பிற்பகுதியில் ஏற்பட்ட கொள்கை வீத அதிகரிப்பிற்கு பின்னர் இச்சீராக்கங்கள் மிகவும் அவதானிக்கத்தக்கதாகத் தோற்றம்பெற்றதன. 2026 யூன் மாதத்திற்கான வட்டி வீதத் தரவுகள், கொள்கை வட்டி வீத அதிகரிப்பானது கடன்வழங்கல் மற்றும் வைப்பு வட்டி வீதங்கள் ஆகிய இரண்டிற்கும் தொடர்ந்து ஊடுகடத்தப்படுவதைக் காட்டுகின்ற அதேவேளை, முன்னைய இறுக்கமான கொள்கை சுழற்சிகளுடன் ஒப்பிடுகையில் வைப்பு வீதங்களில் ஏற்பட்ட பாரியளவிலான அதிகரிப்பிற்கு வலுவான கடன் கேள்விக்கு மத்தியில் 2026 யூன் மாதத்தில் உள்நாட்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடையே காணப்பட்ட குறைந்தளவிலான திரவத்தன்மை மட்டங்கள் காரணமாக இருக்கக்கூடும்.

**வரைபடம் 18: சந்தை வட்டி வீதங்களில் மாதாந்த மாற்றம் மற்றும் கொள்கை வட்டி வீதத்தின் அசைவுகள்**




*குறிப்பு: அனைத்து மாதாந்த வீதங்களும் 2026 யூன் அன்று உள்ளவாறானவை என்பதுடன் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம், சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன்வழங்கல் வீதம் மற்றும் 91- நாள் திறைசேரி உண்டியல் விளைவு வீதம் என்பவற்றின் தரவுப் புள்ளிகள் 2026 யூலை 21 அன்றுள்ளவாறு வழங்கப்பட்டுள்ளன.*

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்

சனவரி 2026இன் தொடக்கத்தில் ஏற்பட்ட உயர்வைத் தொடர்ந்து மிதமடைந்த அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள், எதிர்பார்க்கப்படும் பணவீக்கம் மற்றும் அதிகரித்த நிச்சயமற்ற தன்மையினால் ஏற்படும் இடர்நேர்வுகளின் காரணமாக, 2026 மாச்சு மாத இறுதியிலிருந்து தொடர்ந்து மேல்நோக்கிய அழுத்தத்திற்கு உட்பட்டு காணப்படுகின்றன. 2026 மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வீத அதிகரிப்பைத் தொடர்ந்து, அனைத்து முதிர்ச்சி காலங்களுக்குமான விளைவு வீதங்கள் பாரியளவு அதிகரித்தது. இது ஆரம்பகட்ட ஊடுகடத்தல் நிலையில், அரச பிணையங்களில் இக்கொள்கை வீத அதிகரிப்பின் தாக்கம் குறிப்பிடத்தக்களவில் ஊடுகடத்தப்பட்டதைப் பிரதிபலித்தது. எனினும், அதன்பின்னர் முதலீட்டாளர் நம்பிக்கையில் ஏற்பட்ட முன்னேற்றத்துடன் திறைசேரி உண்டியல் விளைவு வீதங்களில் படிப்படியான மிதமடைதல் அவதானிக்கப்பட்டது. முதலாந்தரச் சந்தையில் திறைசேரி முறி விளைவு வீதங்களும் கொள்கை வீதச் சீராக்கத்திற்கு பதிலிறுக்கும் வகையில் ஆரம்பகட்டத்தில் அதிகரித்திருந்தபோதிலும் திறைசேரி உண்டியல்களுக்கு நிகராக அண்மைய ஏலங்களில் ஓரளவு மிதமடைதலைக் காண்பித்துள்ளன. மேலும், அண்மைய ஏலங்களில் நீண்டகால பிணையங்களை பார்க்கிலும் குறுகிய கால முதிர்வுகளுக்கு முதலீட்டாளர் கேள்வி ஒப்பீட்டளவில் வலுவாகக்

காணப்பட்டுள்ளது. இம்முன்னுரிமையானது இரண்டாந்தரச் சந்தையில் ஏற்பட்ட முன்னேற்றங்களிலும் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, நாணயக் கொள்கை இறுக்கமடைதலைத் தொடர்ந்து, இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையி மேல்நோக்கி நகர்ந்திருந்தபோதிலும், வளையியின் குறுகிய கால முனையுடன் ஒப்பிடுகையில், நீண்டகால முனை ஒப்பீட்டளவில் சமதளமாகக் காணப்பட்டது.

பணவீக்கத்தில் படிப்படியான அதிகரிப்பு ஏற்பட்ட நிலையில், 2026இன் இதுவரையான காலப்பகுதியில் உண்மை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. உண்மை கடன்வழங்கல் வட்டி வீதங்களின் வீழ்ச்சியானது கொடுகடன் கேள்விக்கு ஆதரவளிக்கும் வகையில் குறைந்தளவிலான கட்டுப்பாடுகளைக் கொண்ட நாணய நிலைமைகளைக் குறித்துக்காட்டுகின்றது. எனினும், கொள்கை வீத அதிகரிப்பானது எதிர்வரும் மாதங்களில் சந்தை கடன்வழங்கல் வீதங்களுக்கு ஊடுகடத்தப்பட்டு பெயரளவிலான கடன்வழங்கல் வீதங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பினால் இத்தாக்கம் ஓரளவு எதிரீடுசெய்யப்படக்கூடும் என்பதோடு இதன்மூலம் கொடுகடன் வளர்ச்சி மிதமடையக்கூடும்.

**வரைபடம் 19: அடையப்பட்ட உண்மை வட்டி வீதங்கள்**




*குறிப்பு: மாதாந்த உண்மை வட்டி வீதம் பெயரளவு வட்டி வீதத்தை ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கத்திற்கு (கொ.நு.வி.சு – அடிப்படையாகக் கொண்டது) சீராக்குவதன் மூலம் பெறுவிக்கப்படுகின்றது.*

மூலம்: இலங்கை மத்திய வங்கி

### உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மை[11]

***உள்நாட்டுப் பணச் சந்தையின் மிகைத் திரவத்தன்மையானது 2026இன் இதுவரையான காலப்பகுதியில் தளம்பல்தன்மையினை தொடர்ந்தும் கொண்டிருந்ததுடன், அதன்பின்னர் மீட்சியடைவதற்கு முன்னர் இரண்டாம் காலாண்டில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது.***

உள்நாட்டுப் பணச் சந்தையின் சராசரி மிகைத் திரவத்தன்மையானது 2025இன் நான்காம் காலாண்டில் பதிவுசெய்யப்பட்ட ஏறத்தாழ ரூ. 120 பில்லியன் தொகையிலிருந்து 2026இன் முதலாம் காலாண்டில் ஏறத்தாழ ரூ. 251 பில்லியனிற்கு அதிகரித்தமையானது மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி வாங்குதல்-விற்றல் குறித்த பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்கள் என்பவற்றிலிருந்து தோற்றம்பெற்ற திரவத்தன்மை உட்செலுத்தல்களினைப் பாரியளவில் பிரதிபலித்தது. உள்நாட்டுப் பணச் சந்தையில் அதிகரித்துச்

[11] உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மை நிலைமைகள் மற்றும் மத்திய வங்கியின் பணச் சந்தைத் தொழிற்பாடுகள் என்பன குறித்த மேலதிக விபரங்கள் சந்தைத் தொழிற்பாடுகள் அறிக்கை - 2026 யூனில் கிடைப்பனவாகக் காணப்படுகின்றன. https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/market_operations_report_june_2026_t.pdf

செல்கின்ற மிகைத் திரவத்தன்மை மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தின் அதன்விளைவான கீழ்நோக்கிய சீராக்கம் என்பவற்றிற்குப் பதிலிறுத்தும் விதத்தில், மத்திய வங்கியானது 2026 பெப்புருவரி நடுப்பகுதியிலிருந்து திரவத்தன்மையினை உள்ளீர்க்கின்ற திறந்த சந்தைத் தொழிற்பாடுகளினைத் தொடங்கியது. அதன்பின்னர், மிகைத் திரவத்தன்மையானது 2026 ஏப்பிறல் தொடக்கம் யூன் வரையான காலப்பகுதியில் படிப்படியாக மிதமடைந்தது. அலுவல்சார் ஒதுக்குகளின் ஊடாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தேறிய வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய விற்பனைகள் மற்றும் மத்திய வங்கியின் திறைசேரி முறி உடைமைகளின் மீதான நறுக்குக் கொடுப்பனவுகள் என்பன 2026 ஏப்பிறலிலிருந்து ஒட்டுமொத்த மிகைத் திரவத்தன்மையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. இதற்கமைய, 2026 மாச்சில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 301 பில்லியன் தொகையிலான மாதாந்தச் சராசரி மிகையுடன் ஒப்பிடுகையில், சராசரித் திரவத்தன்மை மிகையானது யூனில் ஏறத்தாழ ரூ. 66 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தது. ஏப்பிறலில் மிகைத் திரவத்தன்மையில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சியொன்றினைத் தொடர்ந்து, திரவத்தன்மையினை உள்ளீர்க்கின்ற திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட போதிலும், ஏப்பிறல் மாத பிற்பகுதியில் மீண்டும் தொடங்கப்பட்டு, விஞ்சியளவிலான திரவத்தன்மையினை முகாமைசெய்வதற்கும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நிலவிய அழுத்தங்களினைத் தணிப்பதற்கும் துணைபுரிந்தன. இருப்பினும், மிகைத் திரவத்தன்மை மட்டமானது மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கொள்வனவுகள் காரணமாக 2026 யூலை முற்பகுதியிலிருந்து அதிகரித்தது. அதற்கமைய, 2026 யூலை 21இல், திரவத்தன்மை மிகையானது ரூ.142 பில்லியனாகக் காணப்பட்டது.

**வரைபடம் 20: ஓரிரவு திரவத்தன்மை, ஓரிரவு கொள்கை வீதம், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதம் போன்றவற்றின் போக்கு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உள்நாட்டுக் கொடுகடன் நிலைமைகள் மற்றும் நாணய நிரம்பல்**

***தனியார் துறைக் கொடுகடனில் குறிப்பிடத்தக்களவிலான விரிவாக்கத்தினால் பிரதானமாக தூண்டப்பட்டு, விரிந்த பண ($M_{2b}$) வளர்ச்சி 2026இன் இதுவரையான காலப்பகுதியில் படிப்படியாக வலுவடைந்தது.***

பொருளாதார நடவடிக்கையில் தொடர்ச்சியான மீட்சி மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் தளர்வினைத் தொடர்ந்த வாகன நிதியிடலுக்கான அதிகரித்த கேள்வி என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, தனியார் துறைக்

கொடுகடன் 2026இல் தொடர்ச்சியாக விரிவடைந்தது. அதேவேளை, அரச துறைக்கான கொடுகடனில் சுருக்கமானது தனியார் துறைக்கான கொடுகடனின் விரிவாக்கத்திற்கு மேலதிக இடைவெளியைத் தொடர்ச்சியாக ஏற்படுத்தியது. அதற்கமைய, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனில் ஒட்டுமொத்த பெயரளவிலான விரிவாக்கம், 2026 இன் முதல் ஐந்து மாதங்களின் போது ரூ. 824.1 பில்லியனாகக் காணப்பட்டு, 2026 மே இறுதியில் 27.8 சதவீதம் கொண்ட வலுவான ஆண்டிற்காண்டு வளர்ச்சியொன்றைப் பிரதிபலித்தது[12]. மேலும், ஐ.அ.டொலருக்கெதிரான இலங்கை ரூபாவின் பெறுமானத்தேய்வானது வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களின் மீதான மதிப்பீட்டு விளைவுகளினூடாக கொடுகடன் கூட்டுக்களில் விரிவாக்கத்திற்குப் பங்களித்தது.

தனியார் துறைக் கொடுகடனின் துறைரீதியான உள்ளமைப்பினைப் பொருத்தவரையில், தனியாள் கடன்கள் மற்றும் முற்பணங்களின் வடிவில் வழங்கப்பட்ட கடன்கள் 2026 சனவரி-மே இலிருந்தான விரிவாக்கத்தின் மிகப்பெரியளவிலான பங்கினை தொடர்ச்சியாகக் கொண்டிருந்தன. இவ்வகைப்பாட்டினுள், குறிப்பிடத்தக்களவிலான அதிகரிப்புக்கள் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கல்/ அடகுபிடித்தல் மற்றும் நீண்டகால நுகர்வுப்பொருட்கள் என்பவற்றில் பதிவுசெய்யப்பட்டிருந்தன. தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலில் விரிவாக்கமானது 2026இன் முதலாம் காலாண்டில் உலகளாவிய தங்க விலைகளில் அதிகரிப்பினால் ஆதரவளிக்கப்பட்டிருக்கக்கூடும். நிதியியல் மற்றும் வியாபாரப் பணிகள் மற்றும் சுற்றுலாத்துறை என்பவற்றில் ஆதரவளிக்கப்பட்டு பணிகள் துறையானது தனியார் துறைக்கான கொடுகடனின் ஒட்டுமொத்த விரிவாக்கத்தில் இரண்டாவது மிகப்பெரியளவிலான அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. அதேவேளை, கைத்தொழில் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனானது கட்டடவாக்கம், இரசாயனம், பெற்றோலியம், மருந்தக மற்றும் சுகாதாரப் பராமரிப்பு; இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள்; மற்றும் உணவு மற்றும் குடிபானங்கள் துணைத் துறைகளிற்கான கடன்வழங்கலினூடாக பிரதானமாக விரிவடைந்தது.

தனியாள் கடன்களும் முற்பணங்களும் 2026இன் முதல் ஐந்து மாதங்களின் போது கொடுகடன் விரிவாக்கத்தின் முதன்மையான தூண்டுதலாக காணப்பட்ட போதிலும், வியாபாரத்துடன் தொடர்புடைய துறைகளுக்கான கடன்வழங்கலானது பணிகள் மற்றும் கைத்தொழில் துறைகளுக்கான அதிகரித்த கொடுகடன் பாய்ச்சல்களினால் ஆதரவளிக்கப்பட்டு, மிக அண்மைய காலத்தில் உத்வேகமடைந்தது. அதேவேளை, வேளாண்மை மற்றும் மீன்பிடித் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் இக்காலப்பகுதியின் போது தாழ்ந்தளவிலான விரிவாக்கத்தைப் பதிவுசெய்தது. மேலும், தனியார் துறைக்கு நிதிக் கம்பனிகளால் வழங்கப்பட்ட கொடுகடன், பிரதானமாக வாகனங்களுக்கான நிதியிடல் மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கல் என்பவற்றைப் பிரதிபலித்து, விரிவாக்கமொன்றைப் பதிவுசெய்தது.

[12] 2026 இன் முதலாமரைப் பகுதியின் போது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட தனியார் துறைக் கொடுகடனில் ஒட்டுமொத்த பெயரளவிலான விரிவாக்கமானது ரூ. 1,069.4 பில்லியனாகக் காணப்பட்டு, 2026 யூன் இறுதியில் 27.4 சதவீதத்தினைக் கொண்ட ஆண்டிற்காண்டு வளர்ச்சியொன்றைப் பிரதிபலித்தது.

**வரைபடம் 21: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கான வெளிநின்ற கொடுகடனில் மாதாந்த மாற்றம்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 22: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கான துறைசார் கொடுகடனில் காலாண்டு மாற்றம்**




*குறிப்பு: மாதாந்த அளவீட்டிற்கமைவாக தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடன் தொகுப்பு முறையியல்களின் வேறுபாடுகள் காரணமாக நாணய அளவீட்டிலிருந்து சிறிதளவு வேறுபடுகின்றது.*

மூலம்: இலங்கை மத்திய வங்கி

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் மத்திய வங்கி இரண்டினதும் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட குறைவொன்றின் காரணமாக 2026 சனவரி-மே வரையிலான காலப்பகுதியில் வங்கித்தொழில் முறைமையினால் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் வீழ்ச்சியடைந்தது. இக்காலப்பகுதியில் அரசாங்க வைப்புக்களில் குறைவொன்றினால் இது பகுதியளவில் எதிரீடுசெய்யப்பட்டிருந்த போதிலும், அரச பிணையங்களின் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் வைத்திருப்புக்களில் வீழ்ச்சியானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனில் வீழ்ச்சிற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது. மத்திய வங்கியினால் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனுக்கான வீழ்ச்சிக்கு அதிகரிக்கின்ற முறி விளைவுகளின்

பின்னணியில், மத்திய வங்கியின் அரச பிணையங்களின் வைத்திருப்புக்களுக்கான நியாயமான பெறுமதிச் சீராக்கங்கள் பிரதான காரணமாக அமைந்திருந்தன.

அதேவேளை, பிரதானமாக இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம், சிறி லங்கன் எயர்லைன்ஸ் லிமிட்டெட், வீதி அபிவிருத்தி அதிகார சபை, தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை மற்றும் அரச உரக் கம்பனி லிமிட்டெட் என்பவற்றின் தேறிய மீள்கொடுப்பனவுகளின் காரணமாக, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடனும் 2026இன் முதல் ஐந்து மாதங்களில் சுருக்கமடைந்தது.

2026 நடுப்பகுதியளவில் சில மிதமடைதல்கள் அவதானிக்கப்பட்ட போதிலும் வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களும் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியின் அடிப்படையில் அதிகரித்தன. மத்திய வங்கி மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் விரிவாக்கங்களின் காரணமாக, வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2026இன் முதல் ஐந்து மாதங்களில் விரிவடைந்தன. அதேவேளை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் விரிவாக்கமானது உயர்ந்தளவிலான வெளிநாட்டு நாணய வைப்புக்களுடன் சேர்த்து வதிவற்றோர்களுக்கு வழங்கப்படும் கடன்களில் அதிகரிப்பொன்றினால் முதன்மையாகத் தூண்டப்பட்டிருந்தது. அதேவேளை, மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் விரிவாக்கம் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கியினால் வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய கொள்வனவுகளைப் பிரதிபலித்தது.

இவ் அபிவிருத்திகளுடன் இசைந்துசெல்லும் வகையில், தனியார் துறைக்கான கொடுகடனில் குறிப்பிடத்தக்களவிலான விரிவாக்கம் மற்றும் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் அதிகரிப்பு என்பவற்றினால் பிரதானமாகத் தூண்டப்பட்டு, விரிந்த பணம் ($M_{2b}$) 2026 மேயில் 12.0 சதவீதம் கொண்ட ஆண்டிற்காண்டு வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.

**வரைபடம் 23: விரிந்த பணத்தின் ($M_{2b}$) ஆண்டிற்காண்டு வளர்ச்சிக்கான பங்களிப்பு**




*குறிப்பு: நியம நாணய நிரம்பல் வழிமுறைகளை கணிப்பிடும் போது தனித்தனியாக வகைப்படுத்தப்படாத அனைத்து சொத்துக்களையும் பொறுப்புக்களையும் ஏனைய விடயங்கள் (தேறிய) உள்ளடக்குகின்றன.*

மூலம்: இலங்கை மத்திய வங்கி

### 3.4. வெளிநாட்டுத் துறை

***இலங்கையின் வெளிநாட்டுத் துறையின் மீதான மத்திய கிழக்குப் போரின் தாக்கத்தினைப் பிரதானமாக பிரதிபலித்து, நடைமுறைக் கணக்கு 2026இன் முதலரைப்பகுதியில் பற்றாக்குறையொன்றைப் பதிவுசெய்தது. நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் மெதுவடைந்து காணப்பட்டதுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளுக்கு மத்தியில் மிதமடைந்தது. இலங்கை ரூபாவானது ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக ஆண்டின் இதுவரையான காலப்பகுதியின் அடிப்படையில் பெறுமதித்தேய்வடைந்தது. எனினும், அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்ட நாணய, இறை மற்றும் முன்மதிமிக்க கொள்கை வழிமுறைகளைத் தொடர்ந்து ரூபா குறைந்த தளம்பல்நிலையை அடைந்ததனால் பெறுமதித்தேய்வின் வேகம் அண்மையில் மிதமடைந்துள்ளது.***

**சென்மதி நிலுவை**

நடைமுறைக் கணக்கு 2026இன் முதலரைப்பகுதியில் போது ஐ.அ.டொலர் 245 மில்லியன் கொண்ட பற்றாக்குறையொன்றைப் பதிவுசெய்தது. தொழிலாளர் பணவனுப்பல்களில் குறிப்பிடத்தக்களவிலான அதிகரிப்பு காணப்பட்ட போதிலும், குறைவடைந்த சுற்றுலா வருவாய்கள் மற்றும் உயர்வடைந்த பணிகள் கொடுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்ந்து உயர்வடைந்த எரிபொருள் மற்றும் வாகன இறக்குமதிகளைப் பிதிபலித்து, வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தமையினால், இது முதன்மையாகத் தூண்டப்பட்டிருந்தது. ஏற்றுமதி வருவாய்களைப் பார்க்கிலும் இறக்குமதிச் செலவினம் மிக விரைவாக அதிகரித்தமையினால் வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை 2026இன் முதலாமரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 5.5 பில்லியனாக விரிவடைந்தது. இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 12.4 பில்லியனாகக் காணப்பட்ட அதேவேளை ஏற்றுமதி வருவாய்கள் மொத்தமாக ஐ.அ.டொலர் 6.9 பில்லியனாகக் காணப்பட்டன.

**வரைபடம் 24: வணிகப்பொருள் வர்த்தகக் கணக்கு**




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

மத்திய கிழக்குப் போருக்கு மத்தியில் உலகளாவிய எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பைப் பிரதபலித்து, எரிபொருள் மீதான இறக்குமதிச் செலவினம் 2026இன் முதலரைப்பகுதியில் 58.8 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) ஐ.அ.டொலர் 3.2 பில்லியனிற்கு அதிகரித்து மொத்த இறக்குமதிச் செலவினத்தின் 25.6 சதவீதத்திற்கு வகைக் கூறியது. மேலும், தனியாள் மற்றும் வர்த்தக வாகனங்கள் இரண்டும் உள்ளடங்கலாக வாகன இறக்குமதிகள் மீதான செலவினம் 2026இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 1.3 பில்லியனாக விளங்கியது. அரசாங்கமானது மோட்டார் வாகனங்களுக்கான சுங்க இறக்குமதி வரி மீதான தற்காலிக 50 சதவீத மிகைக் கட்டணமொன்றை 2026 மேயில் விதித்தது. பேரண்ட முன்மதியுடைய வழிமுறையொன்றாக, 2026 மேயில் மத்திய வங்கி, வாகன நிதியிடலுக்கான

உயர்ந்தபட்ச பெறுமதிக்கான கடன் வரையறைகளையும் திருத்தியமைத்தது. மேலும், 2026 மேயில் கொள்கை வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு, நிதியிடல் செலவுகளை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒட்டுமொத்தத்தில், இவ்வழிமுறைகள் வாகன இறக்குமதிக் கேள்வியை மிதமடையச்செய்யுமென எதிர்பார்க்கப்படுவதுடன் அதனூடாக 2026 யூனில் அவதானிக்கப்பட்ட வாகன இறக்குமதிச் செலவினத்தின் வீழ்ச்சியில் பிரதிபலிக்கப்பட்டவாறு எதிர்வரும் காலத்தில் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கில் அழுத்தங்களை தளர்த்துகின்றது.

**வரைபடம் 25: மாதாந்த வாகன இறக்குமதிகள்**




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

மத்திய கிழக்கில் தற்பொழுது இடம்பெற்றுவரும் போருக்கு மத்தியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பிரதானமாக பிரதிபலித்து, சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்[13] 2026இன் முதலரைப்பகுதியில் 11.8 சதவீதத்தால் (ஆண்டிற்காண்டு) ஐ.அ.டொலர் 1.5 பில்லியனாக வீழ்ச்சியடைந்தது. இதற்கு மாறாக, தொழிலாளர் பணவனுப்பல்கள் 2026 யூனில் 23.2 சதவீதத்தால் (ஆண்டிற்காண்டு) ஐ.அ.டொலர் 4.6 பில்லியனாக[14] அதிகரித்து வலுவான வளர்ச்சியைப் பதிவுசெய்தன.

**வரைபடம் 26: சுற்றுலாத் துறை மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
உரிமம்பெற்ற வங்கிகள்

[13] இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, 2026 சனவரியிலிருந்து பின்னோக்கிய திருத்தப்பட்ட அனுகுமுறையைப் பயன்படுத்தி, மாதாந்த மதிப்பீடுகளின் துல்லியத்தன்மையையும் பிரதிநிதித்துவங்களையும் மேம்படுத்துவதற்கு சுற்றுலா வருவாய்களை மதிப்பீடுசெய்வதற்காக முறையியலைத் திருத்தியமைத்தது.

[14] தொழிலாளர் பணவனுப்பல்கள், டித்வா புயலைத் தொடர்ந்து கிடைக்கப்பெற்றவை போன்ற ஏனைய பணவனுப்பல்களையும் உள்ளடக்கலாம்.

வரைபடம் 27: வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

நிதியியல் கணக்கின் செயலாற்றம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மெதுவடைந்து காணப்பட்டது. 2026இன் முதலாம் காலாண்டில் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மேம்பாடொன்றைக் காட்டியிருந்த போதிலும் ஒட்டுமொத்தத்தில் மிதமடைந்து காணப்பட்டது. அதேவேளை, முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தை கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்பு பங்குச் சந்தை ஆகிய இரண்டிலும் வெளிநாட்டு முதலீடுகள் 2026 சனவரி தொடக்கம் யூன் வரையான காலப்பகுதியில் தேறிய வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தன. எனினும், அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகள் 2026 யூலை 01 இலிருந்து 2026 யூலை 21 வரையான காலப்பகுதியில் தேறிய உட்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தன.

வரைபடம் 28: நிதியியல் கணக்கு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**செலாவணி வீதம்**

ஆண்டின் முதலிரு மாதங்களில் மாதாந்த பெறுமதி உயர்வுகளைப் பதிவுசெய்த இலங்கை ரூபா, மத்திய கிழக்குப் போரின் தொடக்கத்தைத் தொடர்ந்து கணிசமானளவிலான பெறுமானத்தேய்வு அழுத்தங்களை எதிர்கொண்டது. இவ் அழுத்தங்கள், குறிப்பாக எரிபொருள் மற்றும் வாகனங்கள் மீதான உயர்ந்தளவிலான இறக்குமதிச் செலவினம், 2026 மாச்சு-யூன் காலப்பகுதியில் குறைவடைந்த சுற்றுலா துறையிலிருந்தான வருவாய்கள் மற்றும் அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்பு பங்குச் சந்தை என்பவற்றிலிருந்தான வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்கள் என்பவற்றை பிரதிபலித்தன. மேலும், அதிகரித்த சந்தை நிச்சயமற்றதன்மையானது அதிகரித்த ஊக நடவடிக்கை, ஏற்றுமதி பெறுகைகளின் காலங்கடந்த மாற்றுகை அத்துடன் சில இறக்குமதியாளர்கள் இறக்குமதிக் கட்டளைகளை முன்னரே வழங்கியமை, ஊகிக்கப்படும் செலாவணி வீத இடர்நேர்வுகளை முகாமைத்துவம்செய்வதற்கு அதிகரித்த வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகளை அதிகரித்திருப்பதால் வெளிநாட்டுச் செலாவணிக்கான வலுவடைந்த கேள்வி என்பவற்றுக்கு பங்களித்துள்ளதாகத் தெரிகின்றது. அதற்கமைய, இலங்கை ரூபா 2026 யூலை 21 இலுள்ளவாறு ஐ.அ.டொலருக்கு எதிராக 7.8 சதவீதத்தால் பெறுமதித்தேய்வடைந்தது. ஒன்றுசேர்ந்த பெறுமதித்தேய்வு காணப்பட்ட போதிலும், 2026 மாச்சிலிருந்து மாதாந்த பெறுமதித்தேய்வைக் கொண்ட தொடர்ச்சியான நான்கு மாதங்களைத் தொடர்ந்து இலங்கை ரூபா 2026 யூலையில், யூலை 21 வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கு எதிராக சிறியளவிலான பெறுமதி உயர்வைப் பதிவுசெய்தது. குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலித்து, இக்காலப்பகுதியில் இலங்கை ரூபா ஏனைய முக்கிய நாணயங்களுக்கு எதிராக பெறுமதித்தேய்வடைந்தது. பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதம் வீழ்ச்சியடைந்த அதேவேளை, இலங்கைக்கும் அதன் வர்த்தகப் பங்காளர்களுக்கும் இடையிலான நேர்க்கணிய பணவீக்க வேறுபாடு, இலங்கை ரூபாவின் பெயரளவு பெறுமானத்தேய்மானத்தைப் பார்க்கிலும் அதிகளவு எதிரீடுசெய்தமையால், உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் 2026 யூலை 21[15] வரையான காலப்பகுதியில் அதிகரித்தது.

**வரைபடம் 29: செலாவணி வீத அசைவுகள்***




*எண்தொகைகள் 2026 யூலை 21 வரை இற்றைப்படுத்தப்பட்டவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

[15] 2026 ஓகத்து 12 அன்றுள்ளவாறு இலங்கை ரூபா ஐ.அ.டொலரிற்கெதிராக 7.4 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

**ஒதுக்குச் சொத்துக்கள்**

2026 பெப்புருவரி இறுதியளவில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 7.3 பில்லியனாக அதிகரித்திருந்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்[16], வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளுக்கு மத்தியில் 2026 யூன் இறுதியளவில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 6.5 பில்லியனாக மிதமடைந்தது. மத்திய வங்கி 2026 முதலரைப் பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலிருந்து தேறிய அடிப்படையொன்றில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 556 மில்லியனைக் (பெறுமதித் திகதி அடிப்படையில்) கொள்வனவுசெய்தது. இக்காலப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளுக்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள் பன்னாட்டு நாணய நிதியத்துடனான விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான ஐ.அ.டொலர் 695 மில்லியன் தொகையாகக் காணப்படுகின்ற இரு தொகுதிகளின் கிடைப்பனவினை உள்ளடக்கியது.

**வரைபடம் 30: மாதாந்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், ஒதுக்குப் போதுமாந்தன்மை மற்றும் தேறிய வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகள்**




*குறிப்பு: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் பயன்படுத்தத்தக்க நிபந்தனைகளுக்குட்பட்ட சீன மக்கள் வங்கியின் நாணயப் பரஸ்பர பரிமாற்றல் வசதியை உள்ளடக்குகின்றது.*

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## 3.5. இறைத் துறை

***இறைத்துறைச் செயலாற்றம், நிலைபேறான அரசிறை அடிப்படையிலான திரட்சி வழிமுறைகளினால் துணையளிக்கப்பட்டு, 2025 இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2026இன் முதல் ஐந்து மாதங்களில் தொடர்ச்சியாக வலுவடைந்தது.***

2026 மேயில் முடிவடைகின்ற முதல் ஐந்து மாதங்களின் போது, அரசாங்கத்தின் மொத்த அரசிறையும் மானியங்களும் 2025இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 30.6 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. அரசிறையின் பிரதான மூலமான வரி அரசிறை 2026இன் முதல் ஐந்து மாதங்களின் போது 28.9 சதவீதத்தைக் கொண்ட குறிப்பிடத்தக்க ஆண்டிற்காண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. வரி அரசிறையில் உறுதியான செயலாற்றமானது பெறுமதி கூட்டப்பட்ட வரி, கலால் தீர்வைகள், சுங்க இறக்குமதித் தீர்வைகள் மற்றும் வருமான வரிகள் என்பவற்றிலிருந்தான உயர்ந்தளவிலான சேகரிப்புக்களால் பிரதானமாக தூண்டப்பட்டிருந்ததுடன், தொடர்ச்சியான வரிக் கொள்கை வழிமுறைகளின் தாக்கம், மேம்பட்ட வரி நிர்வாகம் மற்றும் பொருளாதார நடவடிக்கையில் படிப்படியான மீட்சி போன்றவற்றை பிரதிபலித்தது. குறிப்பாக எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க

[16] இது சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர நிதிய பரிமாற்றல் வசதியை உள்ளடக்குகின்றது.

உயர்ந்தளவிலான வாகன இறக்குமதிகளைப் பிரதிபலித்து, பெறுமதி கூட்டப்பட்ட வரி, கலால் தீர்வை மற்றும் சுங்க இறக்குமதித் தீர்வைச் சேகரிப்புக்கள் என்பவற்றில் குறிப்பிடத்தக்களவிலான அதிகரிப்பானது வாகனம் தொடர்புடைய வரிகளினால் பிரதானமாக தூண்டப்பட்டிருந்தது. அதேவேளை, மானியங்கள் மற்றும் மாற்றல்கள் மற்றும் சம்பளங்கள் மற்றும் கூலிகள் என்பவற்றின் மீதான உயர்ந்தளவிலான செலவினத்தினால் பிரதானமாக தூண்டப்பட்டு, செலவினமும் தேறிய கடன்வழங்கலும் மீளாய்வுக் காலத்தின் போது 7.4 சதவீதம் கொண்ட மிதமான ஆண்டிற்காண்டு வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. மேலும், மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கல் என்பன 2025 அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2026 இன் முதல் ஐந்து மாதங்களின் போது 29 சதவீத அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தது.

அதற்கமைய, முதலாந்தர நிலுவையானது இக்காலப் பகுதியின் போது ரூ. 1,131.2 பில்லியன் தொகையைக் கொண்ட குறிப்பிடத்தக்க மிகையொன்றைப் பதிவுசெய்தது. ஒட்டுமொத்த இறை நிலுவை, தொடர்ச்சியாக நான்காவது மாதமாகவும் 2026 மேயில் ரூ. 197.3 பில்லியன் தொகையைக் கொண்ட மிகையொன்றைப் பதிவுசெய்த அதேவேளை, நடைமுறைக் கணக்கு நிலுவையானது 2026இன் முதல் ஐந்து மாதங்களின் போது ரூ. 422.8 பில்லியன் தொகையை அடைந்து, மிகையொன்றைப் பதிவுசெய்தது.

**வரைபடம் 31: முக்கிய இறை நிலுவைகள்**




மூலம்: நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

2026 மேயுடன் முடிவடைகின்ற ஐந்து மாதங்களின் போது, தேறிய உள்நாட்டு நிதியளித்தல், 2025இன் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 298.6 பில்லியன் தொகையைக் கொண்ட தேறிய உள்நாட்டு நிதியளித்தலுடன் ஒப்பிடுகையில் ரூ. 197.3 பில்லியன் தொகையைக் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவொன்றைப் பதிவுசெய்தது. வெளிநாட்டு நிதியளித்தல், 2025இன் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 62.0 பில்லியன் தொகையைக் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவொன்றுடன் ஒப்பிடுகையில் 2026 மேயுடன் முடிவடைகின்ற ஐந்து மாதங்களின் போது ரூ. 0.1 பில்லியன் தொகையைக் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவொன்றைப் பதிவுசெய்தது. அதேவேளை, மொத்த அரச படுகடன்[17] 2025 இறுதியில் பதிவாகிய ரூ. 32,195 பில்லியனிலிருந்து 2026 மே இறுதியளவில் ரூ. 32,233 பில்லியனுக்கு அதிகரித்தது.

[17] பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட காலாண்டு புள்ளிவிபரப் படுகடன் திரட்டிற்கமைவாக

### 3.6. நிதியியல் துறை

***வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிலைமைகளிலிருந்து தோற்றம்பெற்றுவரும் சவால்களுக்கு மத்தியில், நிதியியல் துறை தொடர்ச்சியாக தாக்குப்பிடிக்குந்தன்மையை எடுத்துக்காட்டியது.***

தீவிரமடைந்த உலகளாவிய நிச்சயமற்றதன்மைகளுக்கு மத்தியில், வலுவான கொடுகடன் வளர்ச்சி, மேம்பட்டுவரும் சொத்து தரம் மற்றும் நிலையான இலாபத்தன்மை என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, 2026இன் முதலாமரைக் காலப்பகுதியில் வங்கித்தொழில் துறை தொடர்ச்சியாக தாக்குப்பிடிக்குந்தன்மையை எடுத்துக்காட்டியது. பிரதானமாக கடன்கள் மற்றும் கிடைக்கப்பெறத்தக்கவைகள் என்பனவற்றின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் காரணமாக 2026இன் முதலாமரைக் காலப்பகுதியில், வங்கித்தொழில் துறையின் மொத்தச் சொத்துக்கள் விரிவடைந்தன. இதற்கமைய, 2026 யூன் இறுதியில் மொத்த சொத்துக்கள் 9.3 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) வளர்ச்சியடைந்து ரூ. 26.0 றில்லியனை அடைந்தது. மேலும், 2026 யூன் இறுதியில் மொத்த கடன்கள் மற்றும் கிடைக்கப்பெறத்தக்கவைகள் 23.6 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) ரூ. 15.3 றில்லியனுக்கு விரிவடைந்தன.

வங்கித்தொழில் துறையின் ஒட்டுமொத்த தவணைத் தவறுதல் இடர்நேர்வு, கட்டம் 3 கடன்கள் விகிதத்தின் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு, வலுவான கொடுகடன் வளர்ச்சியினாலும் கட்டம் 3 கடன்களின் வெளிநிற்கின்ற இருப்பின் வீழ்ச்சியொன்றினாலும் ஆதரவளிக்கப்பட்டு, 2025இன் முதலாமரை இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 12.0 சதவீதத்திலிருந்து 2026இன் முதலாமரை இறுதியில் 9.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இத்துறையானது, 2026இன் முதலாமரைப் பகுதியில் ரூ. 199.4 பில்லியன் வரிக்குப் பின்னரான இலாபத்தினை அறிக்கையிட்டு, 6.3 சதவீத ஆண்டிற்காண்டு வளர்ச்சியினைப் பிரதிபலித்தது. எவ்வாறாயினும், பங்குரிமை மீதான ஆதாயம், சொத்துக்கள் மீதான ஆதாயம் மற்றும் தேறிய வட்டி இலாப எல்லை போன்ற இலாபக் குறிகாட்டிகள், 2025இன் முதலாமரைப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 2026இன் முதலாமரைப் பகுதியில் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.

திரவத்தன்மைக் காப்பு விகிதங்களால் அளவிடப்பட்டவாறு, வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மையானது, 2025இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2026இன் முதலாமரை இறுதியில் வீழ்ச்சியடைந்து, கொடுகடன் விரிவாக்கத்தினை நோக்கிய ஒழுங்குமுறைப்படுத்தல் திரவத்தன்மைக்கு தகுதியுடைய சொத்துக்களின் மீள்ஒதுக்கீட்டினை சாத்தியமானளவில் பிரதிபலித்த அதேவேளை, திரவத்தன்மை மட்டங்கள் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு நன்கு மேல் காணப்பட்டன. இதற்கமைய, ரூபாய் திரவத்தன்மைக் காப்பு விகிதமானது 2025இன் முதலாமரை இறுதியில் காணப்பட்ட 328.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026இன் முதலாமரை இறுதியில் 273.0 சதவீதமாக வீழ்ச்சியடைந்த அதேவேளை, அனைத்து நாணய திரவத்தன்மைக் காப்பீட்டு விகிதங்கள் 2025இன் முதலாமரை இறுதியில் காணப்பட்ட 283.1 சதவீதத்திலிருந்து 2026இன் முதலாமரை இறுதியில் 230.0 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, துரிதமடைந்த கொடுகடன் வளர்ச்சியினால் ஆதரவளிக்கப்பட்டு, மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்துடன் தொடர்புபடுத்தி இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் ஏற்பட்ட வேகமான வளர்ச்சியின் காரணமாக, வங்கித்தொழில் துறையின் மொத்த மூலதன போதுமை விகிதமானது முன்னைய ஆண்டின் 19.4 சதவீதத்திலிருந்து 2026 யூன் இறுதியில் 7.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

அதிகரித்த கடன்கள் மற்றும் முற்பணங்களால் பிரதானமாக ஆதரவளிக்கப்பட்டு, நிதிக் கம்பனிகள் துறை 2026இன் முதலாமரை இறுதியில் அதன் சொத்துத் தளத்தில் 41.0 சதவீத ஆண்டிற்காண்டு விரிவாக்கத்தைப் பதிவுசெய்தது. இதற்கமைய, அதிகரித்த வாகன மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்கள் என்பனவற்றினால் தூண்டப்பட்டு, இத்துறையின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2026இன்

முதலாமரை இறுதியில் 45.0 சதவீத ஆண்டிற்காண்டு குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தது. மேலும், மேம்பட்ட சொத்துத் தரத்தினை பிரதிபலித்து, பிரதானமாக வலுவான கொடுகடன் வளர்ச்சி மற்றும் கட்டம் 3 கடன்களின் இருப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பவற்றின் காரணமாக, துறையின் மொத்த கட்டம் 3 கடன்கள் விகிதமானது, 2025இன் முதலாமரை இறுதியில் காணப்பட்ட 8.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026இன் முதலாமரை இறுதியளவில் 5.1 சதவீதமாக வீழ்ச்சியடைந்து. மேலும், நிதிக் கம்பனிகள் துறையானது அதன் திரவத்தன்மையை 2026இன் முதலாமரை இறுதியில் குறைந்தப்பட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு நன்கு மேல் பேணியதுடன், ரூ. 100.5 பில்லியன் திரவச் சொத்துக்கள் மிகையொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், இத்துறையானது 2026 ஏப்பிறல் - யூன் காலப்பகுதியில் ரூ. 21.0 பில்லியன் வரிக்குப் பிந்தைய இலாபத்தை அறிக்கையிட்டு, 2026/27 நிதியாண்டின் முதல் மூன்று மாதங்களில் 16.4 சதவீத ஆண்டிற்காண்டு வளர்ச்சியை பதிவுசெய்தது. மூலதனப் போதுமை நியதிகளில், நிதிக் கம்பனிகள் துறை மூலதனப் போதுமை விகிதம் குறிப்பிடத்தக்க கொடுகடன் விரிவாக்கத்தினால் தூண்டப்பட்டு பிரதானமாக இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் ஏற்பட்ட (மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் தொடர்பில்) வேகமான வளர்ச்சியின் காரணமாக, 2025இன் முதலாமரை இறுதியளவில் பதிவுசெய்யப்பட்ட 22.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026இன் முதலாமரை இறுதியில் 19.3 சதவீத வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது.

**அட்டவணை 03: வங்கித்தொழில் மற்றும் நிதிக் கம்பனிகள் துறைகளின் முக்கிய நிதியியல் ஆற்றல்வாய்ந்ததன்மைக் குறிகாட்டிகள்**

| முக்கிய குறிகாட்டிகள் (%) | 2025 யூன் இறுதியிலுள்ளவாறு | 2026 யூன் இறுதியிலுள்ளவாறு (தற்காலிகமானது) |
|---|---|---|
| **வங்கித்தொழில் துறை** | | |
| மொத்த கட்டம் 3 கடன்கள் விகிதம் | 12.0 | 9.0 |
| சொத்துக்கள் மீதான ஆதாயம் | 2.6 | 2.4 |
| பங்குரிமை மீதான ஆதாயம் | 18.5 | 16.9 |
| தேறிய வட்டி இலாப எல்லை | 4.5 | 4.4 |
| மூலதன போதுமாந்தன்மை விகிதம் | 19.4 | 17.3 |
| **நிதிக் கம்பனிகள் துறை** | | |
| மொத்த கட்டம் 3 கடன்கள் விகிதம் | 8.3 | 5.1 |
| சொத்துக்கள் மீதான ஆதாயம் | 6.9 | 5.7 |
| பங்குரிமை மீதான ஆதாயம் | 15.2 | 15.6 |
| தேறிய வட்டி இலாப எல்லை | 11.5 | 10.4 |
| மூலதன போதுமை விகிதம் | 22.0 | 19.3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

2026இன் முதல் ஆறு மாதக்காலப்பகுதியில், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் ஆண்டின் இதுவரையானக் காலப்பகுதியில் 1.6 சதவீத வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்த அதேவேளை ஸ்ராண்டட் அன்ட் புவர்ஸ் 20 சுட்டெண் அதே காலப்பகுதியில் 0.8 சதவீத சிறியளவிலான உயர்வினைப் பதிவுசெய்ததுடன் பங்குரிமைச் சந்தையானது தொடர்ந்தும் மிதமடைந்து காணப்பட்டது. 2025இல் பதிவுசெய்யப்பட்ட அனைத்து பங்கு விலைச் சுட்டெண் மற்றும் ஸ்ராண்டட் அன்ட் புவர்ஸ் 20 சுட்டெண்கள் 41.9 சதவீத மற்றும் 26.6 சதவீதம் கொண்ட வலுவான ஆண்டு ஈட்டல், பங்கு பரிவர்த்தனை சந்தை செயலாற்றத்தில் குறிப்பிடத்தக்க மிதமடைதலை எடுத்துக்காட்டியது.

மத்திய கிழக்கில் நிலவுகின்ற புவிசார் அரசியல் பதற்றங்களிலிருந்து தோற்றம்பெற்ற உயர்ந்தளவிலான உலகளாவிய நிச்சயமற்றதன்மைகளே நலிவடைந்த சந்தைச் செயலாற்றத்திற்கு முக்கிய காரணமாகும். இதன்விளைவாக, உள்நாட்டு வலு விலைகள் அதிகரித்தன, பணவீக்க அழுத்தங்கள் அதிகரித்தன மற்றும் அதனைத் தொடர்ந்து நாணயக் கொள்கை இறுக்கமடைந்தது. இவ்வபிவிருத்திகள், முதலீட்டாளர்களின்

எண்ணப்பாங்கு மற்றும் பங்கேற்பு என்பவற்றில் தாக்கம்செலுத்தி சராசரி நாளாந்த புரள்வை 2025இல் காணப்பட்ட ரூ. 5,179.2 மில்லியனிலிருந்து 2026இன் முதல் ஆறு மாதக்காலப்பகுதியில் ரூ. 4,468.4 மில்லியனாக வீழ்ச்சியடையசெய்தது.

அதிகரித்த உலகளாவிய நிச்சயமற்றதன்மைகள் மற்றும் இறுக்கமான உலகளாவிய நிதியியல் நிலைமைகள் என்பவற்றிற்கு மத்தியில், தொடர்ச்சியான வெளிநாட்டு பாய்ச்சல்கள் பன்னாட்டு முதலீட்டாளர்களிடையே தொடர்ந்து நிலவிய இடர்நேர்வினை தவிர்க்கும் எண்ணப்பாங்கினை பிரதிபலித்தன.

### 3.7. உலகளாவிய அபிவிருத்திகள்

***மத்திய கிழக்கில் இடம்பெற்று வருகின்ற போரின் தாக்கங்களை பாரியளவில் பிரதிபலித்து, உலகளாவிய வளர்ச்சி குறைவடைந்துக் காணப்படுகின்றது என எறிவுசெய்யப்பட்டுள்ள அதேவேளை, உலகளாவிய முதன்மைப் பணவீக்கம் ஆண்டுக்காலப்பகுதியில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பல மத்திய வங்கிகள் இறுக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை பின்பற்றுவதனால், உலகளாவிய நாணயக் கொள்கை எச்சரிக்கைமிக்க நிலையை நோக்கி நகர்கின்றது.***

2026 நடுத்தர யூலையில் மத்திய கிழக்குப் போர் தீவிரமடைவதற்கு முன்னர், 2026 யூலையில் வெளியிடப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் உலகப் பொருளாதார தோற்றப்பாட்டின்படி, உலகளாவிய பொருளாதார வளர்ச்சியானது 2026 ஏப்பிறலில் எதிர்வுகூறப்பட்டதிலிருந்து பரந்தளவில் மாற்றமடையாது காணப்பட்ட போதிலும், 2024/2025ஆம் ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட 3.5 சதவீதம் கொண்ட சராசரியிலிருந்து குறைவடைந்து 2026இல் 3.0 சதவீதத்திற்கு மெதுவடைந்து, அதன் பின்னர் 2027இல் 3.4 சதவீதத்திற்கு துரிதமடையும் என எறிவுசெய்யப்பட்டுள்ளது. உலகளாவிய வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மிதமான மந்தநிலை, முக்கியமாக மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலின் தாக்கங்களை பெருமளவில் பிரதிபலிக்கின்றது. இருப்பினும், செயற்கை நுண்ணறிவின் முன்னேற்றங்கள் மற்றும் அதன் பயன்பாடு என்பவற்றின் காரணமாக உலகளாவிய தொழில்நுட்பச் சுழற்சியில் துரிதமடைந்த கேள்வியினால் உந்தப்பட்ட உத்வேகத்தினால் பகுதியளவில் எதிரீடுசெய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உயர்வடைந்து வரும் வலு விலைகளினால் தூண்டப்பட்டு, பணவீக்கமும் பணவீக்க எதிர்பார்க்கைகளும் அதிகரித்துள்ளன.

**வரைபடம் 32: புவிசார் அரசியல் இடர்நேர்வுச் சுட்டெண்**




மூலம்:https://www.matteoiacoviello.com

மத்திய வங்கியின் நடவடிக்கைகள், வட்டி வீதங்கள் மற்றும் கொள்கை விளைவுகள் தொடர்பான பொதுமக்கள், ஊடகங்கள் மற்றும் சந்தைகள் என்பவற்றில் நிலவும் நிச்சயமற்றதன்மையை வெளிப்படுத்தும் நாணயக் கொள்கை நிச்சயமற்றதன்மைச் சுட்டெண்கள், வரலாற்றிலேயே அவற்றின் உயர்ந்தளவிலான மட்டத்தினை எட்டி, நாணயக் கொள்கைத் தலையீடுகளின் எதிர்காலப் போக்கு, காலவரையறை மற்றும் செயற்றிறன்மிக்கத்தன்மை என்பவற்றைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையை எடுத்துக்காட்டுகின்றது. ஆகையினால், நடவடிக்கைகளில் ஒப்பீட்டளவில் அமைதியான மெதுவடைதலுடன் இணைந்து புலப்படக்கூடிய பணவீக்க அழுத்தங்களைக் கருத்திற்கொண்டு, உலகளாவிய நாணயக் கொள்கை குறைந்தளவு தளர்வானதாக காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, கொள்கைசார் நிச்சயமற்றதன்மையும் புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மையும் 2027 முழுவதும் உயர்ந்தளவில் காணப்படும் என ஊகிக்கப்படுகின்றது.

2025இன் செத்தெம்பர், ஒத்தோபர் மற்றும் திசெம்பர் மாதங்களின் வீதக் குறைப்புக்களைத் தொடர்ந்து, அமெரிக்க பெடரல் ரிசேர்வானது பெடரல் நிதிய வீதத்தை 2026இன் இதுவரையில் 3.50–3.75 சதவீதத்தில் பேணியுள்ளது. உலகளாவிய வலு விலைகளின் அண்மைய அதிகரிப்பின் விளைவாக உயர்ந்தளவிலான பணவீக்கத்திற்கு மத்தியிலும், பொருளாதார நடவடிக்கைகளின் உறுதியான விரிவடைதலை எடுத்துக்காட்டி, அமெரிக்க பெடரல் ரிசேர்வானது அதன் 2026 யூன் மாத நாணயக் கொள்கை மீளாய்வின் போது, பெடரல் நிதிய வீதத்தை மாற்றமின்றிப் பேணுவதற்கு தீர்மானித்தது. அதன் முக்கிய கொள்கை வட்டி வீதங்களை மாற்றமின்றி பேணுவதற்கான மூன்று தொடர்ச்சியான தீர்மானங்களைத் தொடர்ந்து, ஐரோப்பிய மத்திய வங்கி 2026 யூன் மாத நாணயக் கொள்கை மீளாய்வின்போது அதன் மூன்று முக்கிய வட்டி வீதங்களையும் 25 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரித்தது. அதற்கமைய, மத்திய கிழக்கில் நிலவுகின்ற போரிலிருந்து எழுகின்ற பணவீக்க அழுத்தங்களைக் எடுத்துக்காட்டி, ஐரோப்பிய மத்திய வங்கியானது வைப்பு வசதி வீதத்தை 2.25 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை, பணவீக்கத்திற்கான மேல்நோக்கிய இடர்நேர்வுகள் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் என்பவற்றுடன், தோற்றப்பாடு தொடர்ந்தும் நிச்சயமற்றதாக காணப்படுவதாக குறித்துக்காட்டியது. நடுத்தர காலத்தில் இவ்விடர்நேர்வுகளின் அளவு, வலு விலை அதிர்வுகளின் தீவிரத்தன்மை மற்றும் நீடித்தக் காலம் அத்துடன் அதன் மறைமுக மற்றும் இரண்டாம் சுற்று தாக்கங்களின் வலிமை என்பவற்றின் மீது பாரியளவில் தங்கியிருக்கும் என ஐரோப்பிய மத்திய வங்கி மேலும் குறிப்பிட்டுள்ளது. 2025 திசெம்பரில் வங்கி வீதங்களின் குறைப்பினைத் தொடர்ந்து, இங்கிலாந்து வங்கி அதன் 2026 யூன் மாத நாணயக் கொள்கை மீளாய்வின் போது வங்கி வீதத்தை 3.75 சதவீதத்தில் பேணியது. மத்திய கிழக்கில் இடம்பெற்று வரும் போர் உலகளாவிய வலு விலைகளைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையை உயர்வடையசெய்வதுடன், குறிப்பாக உயர்வடைந்த வலு விலைகள் தொடர்ந்தும் காணப்படும்பட்சத்தில், விலைகள் மற்றும் கூலிகள் என்பவற்றின் மீதான இரண்டாம் சுற்று தாக்கங்களின் இடர்நேர்வினை அதிகரிக்கக்கூடும் என இங்கிலாந்து வங்கி குறித்துக்காட்டியது. வீட்டலகுகளாலும் வியாபாரங்களாலும் எதிர்கொள்ளப்படும் வட்டி வீதங்கள் மோதலுக்கு முன்னைய மட்டங்களுக்கு மேல் காணப்படுவதுடன், காலப்போக்கில் பணவீக்கத்தின் மீதான கீழ்நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இங்கிலாந்து வங்கி குறித்துக்காட்டியது. 2025 திசெம்பர் மாதத்தில் குறுகியகால கொள்கை வட்டி வீதம் 25 அடிப்படைப் புள்ளிகளால் 0.75 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதன் 2026 யூன் மாத நாணயக் கொள்கை மீளாய்வில் யப்பான் வங்கி அதனை மேலும் 25 அடிப்படைப் புள்ளிகளால் 1.00 சதவீதத்திற்கு உயர்வடையசெய்து, 31 வருடங்களில் பதிவான மிக உயர்ந்த மட்டத்தை எட்டியது. அண்மைய கொள்கை வீத அதிகரிப்புடன், மத்திய கிழக்குப் போரினால் தூண்டப்பட்ட வலு அதிர்வுகளிலிருந்தான விலை அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதன் மீது கவனம் செலுத்தி வருவதுடன், நாணயக் கொள்கையை மேலும் இறுக்கமாக்குவதற்கான அதன் தயார்நிலையை யப்பான் வங்கி சமிக்ஞைபடுத்தியுள்ளது. அதேவேளை, தீவிரமடைந்து வரும் புவிசார் அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில் தோற்றம்பெற்று வருகின்ற சந்தைப் பொருளாதாரங்களில் நாணயக் கொள்கையானது மேலும் தளர்த்தப்படும் எனும் எதிர்பார்க்கைகள் மிதமடைந்தன. பிலிப்பைன்ஸ் மத்திய வங்கி, செர்பியாவின் தேசிய வங்கி மற்றும்

தென்னாப்பிரிக்க ரிசேர்வ் வங்கி உள்ளடங்கலாக தோற்றம்பெற்று வரும் சந்தைப் பொருளாதாரங்களின் மத்திய வங்கிகள், அண்மைய நாணயக் கொள்கை மீளாய்வுகளின்போது மத்திய கிழக்கில் இடம்பெற்று வரும் போரிலிருந்து எழுகின்ற உயர்ந்தளவிலான நிச்சயமற்றதன்மையையும் உள்நாட்டு விலைகள் மீதான அதன் பணவீக்க தாக்கத்தினையும் எடுத்துக்காட்டி, அவற்றின் கொள்கை வட்டி வீதங்களை அதிகரித்தன.

**வரைபடம் 33: உலகளாவிய கொள்கை வீத மாற்றங்கள்**




குறிப்பு: 2026 யூலை 21 அன்று கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையிலமைந்தது.
மூலம்: https://www.cbrates.com

2025இன் மற்றும் 2026இன் முற்பகுதியில் பதிவான மட்டங்களுடன் ஒப்பிடுகையில் தற்போது உலகளாவிய உணவு மற்றும் வலு விலைகள் தளம்பல்மிக்கதாகக் காணப்படுகின்றன. தற்போதைய உலகளாவிய எண்ணெய் விலை தளம்பல்களுக்கு ஐக்கிய அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையிலான போரிலிருந்து தோன்றியுள்ள நிரம்பல் பக்க கரிசனைகள் காரணமாயமைந்துள்ளன. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் உணவு விலைச் சுட்டெண் 2025 திசெம்பரில் பதிவான 124.5 சுட்டெண் புள்ளிகளிலிருந்து அதிகரித்து 2026 ஏப்பிறலில் 131.0 சுட்டெண் புள்ளிகளை அடைந்ததன் பின்னர், 2026 யூனில் 130.3 புள்ளிகள் சராசரியாகவிருந்தது. 2025 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2026 யூனில் எண்ணெய், இறைச்சி மற்றும் தானியங்கள் என்பவற்றிற்கான விலைச் சுட்டெண்கள் அதிகரித்துள்ள அதேவேளை, பால் பொருட்கள் மற்றும் சீனி என்பவற்றிற்கான விலைச் சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்துள்ளன.

**வரைபடம் 34: உலகளாவிய வலு விலைகளின் மற்றும் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் உணவு விலைகளின் அசைவுகள்**




மூலம்:fred.stlouisfed.org
மூலம்: உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

ISBN 978-624-6764-40-1